உ

"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

காலாண்டிதழ்

சித்திரை - வைகாசி - ஆனி - 1993
அன்பளிப்பு - 50p

## கொழும்பு - கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கும்பாபிஷேகச் சிறப்பிதழ்




கொழும்பு - கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

தென்னவன் சிவனின்

திருவருட் திறன் சொல்லும்

தெய்வீக எழுத்துக்கள்

எத்தனையோ அத்தனைக்கும்

எங்களது ஆத்மீக வணக்கங்கள்

-ஆசிரியர் குழுவும் வாசகர்களும்-

அன்பு வாசகர்களுக்கு எங்கள்

**இதயம் கனிந்த**
**தமிழ்ப்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்**


ஆசிரியர் குழு

இணை ஆசிரியர்கள்: மு. நற்குணதயாளன் , ச. ஆனந்ததியாகர்.
நிர்வாகத் தொடர்பு: வ. இ. இராமநாதன்
பொருளாதாரத் தொடர்பு: சிவ. அசோகன்
பொது மக்கள் தொடர்பு: மாணிக்கம் சுரேஷ்
மகளிர் பகுதித் தொடர்பு: உமா ஜெயக்குமார்

வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**Saiva Munnetta Sangam (U.K)**
**Registered Charity No: 292085**



தொடர்பு முகவரி : **3 Gayfere Road, Clayhall, Ilford, Essex, IG5 0JG.**

உ
சிவமயம்
'ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்'

உலகம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.
மனித உயிர்களின் அவல ஓலங்கள் நாற்றிசையும் கேட்டுக் கொண்டிருக்கின்றன.
இந்த ஓலங்களின் துயரங்களூடே வேதமோதுபவர்களின்
வெண்கலச் சத்தங்களும் கேட்கின்றன.
இந்த நிகழ்வுகளின் இடைவெளிகளுக்குள் தன்னை நுழைத்துத் தரமான தத்துவ
ஆய்வுகளோடு இரண்டாவது 'கலசம்' உங்கள் கைகளில் இன்று தவழ்கிறது.
முதலாவது கலசத்துக்கு வந்த உங்களது அபிப்பிராயங்கள் எம்மை மகிழ்ச்சிக் கடலில்
அமிழ்த்தியபோது , அந்த மகிழ்ச்சிக் கடலில் நாம் சுழியோடி எடுத்த நல் முத்துத்தான்
இந்த இரண்டாவது கலசம். இது உங்கள் கைகளில் தவழும் இப் புனித மாதத்தில்,
'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்று தன் பணி செய்து
கொண்டிருக்கும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு
விழா மிகச் சிறப்பாக நடைபெற்றதறிந்து நாமும் பெருமை கொள்கிறோம்.
எல்லாம் வல்ல கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா கோலாகலமாக நடைபெற்றதறிந்து
உள்ளம் பூரித்து நிற்கின்றோம்.
மனிதர்கள் மதத்தை மறந்து மதங்கொண்டு அலைகின்ற துயரம் நிறைந்த இக்
காலகட்டத்தில் மதத்தின் ஆத்மீகக் கிளைகளில் தொங்கும் சுவைமிக்க கனிகளாகக்
கலசத்தின் ஒவ்வொரு படைப்பையும் தந்துள்ளோம்.
எங்களது ஆத்மீக அறைகூவலின் ஓசையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு உங்களது
அன்பான விமர்சனங்கள் எமக்குத் தேவை.
நல்லவை சொல்லவே நாம் புறப்பட்டிருக்கிறோம்.
உங்களுக்காக எங்களது எழுதுகோல்கள், தத்துவமை கொண்டு ,தரணி போற்றும்
சிந்தனை முத்துக்களைத் தரத் தயாராகவுள்ளன.
தத்துவ ஒளியில், தயவான தத்துவனின் தண்மையில் சயனம் கொள்ள தயக்கமின்றி
உள்ளே நுழையுங்கள்.
உண்மைகள் வெளிச்சமாக உள்ளன.
வாருங்கள்!
உண்மைகளின் வெளிச்சத்தில் பொய்மைகளைக் களைய, ஆண்டவன் அருள் வேண்டி
அவனின் திருவடியில் அழகாகத் தமிழ் எழுதும்,

இணையாசிரியர்கள்

# தந்தைக்கு மந்திரம் சொன்ன சுவாமிநாதனுக்குக்
# கும்பாபிஷேகப் பெருவிழா



இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் இலங்கை மாநகரின் இனிய சூழலில் ஒரு பெருவிழா!

சைவத்தையும், தமிழையும் வளர்க்க ஆலயங்களும் யாத்திரிகர் மடங்களும் ஆங்காங்கு அமைந்திருக்க , கங்கா தேவியானவள் களனி கங்கையாய் இப் புனித பூமியிலே களி நடனம் புரிந்து கொண்டிருக்கத் தந்தைக்கே உபதேசம் செய்த சுவாமிநாதன் எனப் பெயர் கொண்ட குகன் தெற்கு முகம் நோக்கிய தெட்சிணா மூர்த்தி போல் கொம்பனித்தெரு திவ்ய சோஷாஷ்த்திரத்திலே தனிச் சிறப்பாய் தெற்கு முகம் நோக்கி இச்சா சக்தி, கிரியா சக்தி , ஞான சக்தி சமேதராய் மயூர வாகனத்துடன் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈய்ந்து கலியுக வரதனாம் கந்தப் பெருமான் அருளாட்சி புரிந்து வரும் புண்ணிய தலம் இது.

முருகப் பெருமானுடன் பரிவார மூர்த்திகளாக தனித்தனி ஆலயம் கொண்டு எழுந்தருளியிருக்கும் சூரியன் , சந்திரன், விநாயகர், சண்முகர், நடேசர் நால்வர் (சமய குரவர்) , நாராயணன் , சனீஸ்வரன் நவக்கிரகம், நூதன ஆலயங்களாக பைரவர், ராஜ ராஜேஸ்வரி , சந்திர, சூரியர், ஆலயங்களும் நூதன மூர்த்திகளாக சிவன் ,அம்பாள் , மஹாவிஷ்ணு, ராஜ ராஜேஸ்வரி, முதலான மூர்த்திகட்கும் 81 அடி உயரம் கொண்ட காண்போரை கவர்ந்திழுக்கும் கண்கவர் இராஜகோபுரமும் 51 அடி உயரமான இருமருங்கு மணிக் கோபுரங்களும் புதிய கொடித்தம்பமும் கொண்டு விளங்கும் அருள்மிகு சிவ சுப்பிரமணிய சுவாமிக்குத் திருக்குடமுழுக்கு விழா.

மங்களகரமான ஆங்கீரச ஆண்டு.

பங்குனித் திங்கள் பதினாறாம் நாள்.

அமிர்த சித்த யோகமும் மீன லக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில் காலை 6−16 க்கும் 7−36 க்கும் இடையில் வரும் சுப நேரத்தில் எம் பெருமான் திருமுருகனுக்குத் திருக் குட முழுக்கு விழா ஆரம்பமானது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்.

பல நாடுகளிலிருந்தும் எம்பெருமான் திருவருள் பெற வந்திருக்கும் பக்தப் பெரு வள்ளல்கள்.

எங்கு பார்த்தாலும் மனிதத் தலைகள்தான்.

எத்திசை நோக்கினும் அரோகராச் சத்தங்களே!

மணியோசைகள் காதுச் சவ்வுகளை ஊடறுத்துச் செல்லுகின்றன.

கற்பூரப் புகைகள் வானத்தைக் கறுப்பாக்கிக் கொண்டிருக்கின்றன.


இந்த ரம்மியமான பக்திச் சூழலில்−

சர்வபோதகர் −வேதாக சிரோண்மணி−சர்வசாதக திலகம்− பிரம்மஸ்ரீ எஸ். முத்துக்குமாரசுவாமி குருக்களுடன் சென்னை காளிகாம்பாள் தேவஸ்தான சிவாச்சார்ய திலகம் டீ.எஸ் சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்களும் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலய ஆர். நாகநாதசிவ குருக்களும் சூழ நிற்க கும்பாபிஷேகத்தின் பிரதம குருவான பிரதிஷ்டா சிரோண்மணி சிவானுபூதி வேதாகம சிரியாசூடாமணி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் கும்பாபிஷேகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அளவையூர் நாதஸ்வர வித்துவானின் மங்கள வாத்தியம் எழுப்ப ,இதயம் எல்லாம் பூரிக்க ,எம்பெருமான் சின்னவன் முருகனுக்கு சிங்காரத் திருவிழா இனிதாக நடந்தது.

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நாமிருந்தாலும் எம்பெருமானின் திருவருள் எமக்கும்,கிடைக்கும் வண்ணம் மனதார அவனின் பாதார விந்தங்களை வணங்கி நிற்கிறோம்.

# உயர்வாசற் குன்றிலொரு குறிஞ்சிக் குமரன்



## ஹைகேட் முருகன் ஆலயம்

பிரித்தானிய சாம்ராஜியத்தில் அமைந்துள்ள சைவசமயக் கோவில்கள் என்ற வரிசையில் இரண்டாவது பேட்டிக் கட்டுரை இது. சென்ற பேட்டியில் தனி ஒரு மனிதனின் முயற்சியாலும் ஊக்கத்தாலும் உருவாக்கப்பட்டு இலண்டனின் தென்மேற்கு பகுதியில் அமர்ந்து

**கண்டு கேட்டவர்: மாணிக்கம் சுரேஷ்**

விக்கினங்கள் தீர்க்கும் விம்பிள்டன் விநாயகர் ஆலயத்தைப் பற்றி எழுதியிருந்தோம்.

அந்த வரிசையில் இவ்விதழில் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கு உதாரணமாக இலண்டன் மாநகரில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய பிரித்தானிய இந்து(சிவ) ஆலய தர்மஸ்தாபனத்தின் குழந்தையாகிய உயர்வாசற் குன்று முருகனைப் பற்றிய ஒரு பேட்டியைத் தருகின்றோம். கலசத்தின் சார்பில் திரு.மாணிக்கம் சுரேஷ் அவர்கள் இக்கோவில் அறக்கட்டளையின் தலைவரும், நிரந்தர தர்மகர்த்தாக்களில் ஒருவருமாகிய மதிப்புக்குரிய திரு வாமதேவன் அவர்களுடன் நடாத்திய உரையாடலின் சுருக்கம் இங்கே தரப்பட்டுள்ளது.

இந்தக் கோயில் கட்டிடப்பணி எங்கே எப்போது யாரால் ஆரம்பிக்கப்பட்டது? இக்கோவில் உருவாவதற்கு முன்னால் இலண்டனில் ஏதாவது சைவசமய கூட்டு வழிபாடுகள் நடந்ததா? என்று வினவியபோது – இதற்குப் பதில் அளித்த தலைவர் இது ஒரு அறக்கட்டளை என்றும், ஆதலால் தனிப்பட்டவர்களின் பெயர்கள் குறிப்பிடக்கூடாது என்றும் கூறினார். இருந்தாலும் இலண்டனில் ஆலயம் அமைப்பதையே தனது நோக்கமாகக் கொண்டு இங்கிலாந்து வந்து இவ்வாலயப்பணிக்கு வித்திட்ட, இவ்வாலயத்தின் அறக்கட்டளையின் தந்தை, சிவபதம் அடைந்துவிட்ட பெருமதிப்புக்குரிய ஐயா சோமசுந்தரம் சபாபதிப்பிள்ளை அவர்களைப் பற்றிக் குறிப்பிடுதல் ஒரு வரலாற்றுத் தேவை என்று கூறினார். 1965 ஆம் ஆண்டு இலண்டனுக்கு தன்னுடைய உறவினர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு வந்த ஐயா அவர்கள் (இப்படித்தான் திரு சபாபதிப்பிள்ளையவர்களை வாமதேவன் குறிப்பிட்டார்) வருவதற்கு முன்னே விடுத்த கட்டளை பின்வருமாறு "இங்கிலாந்தில் ஒரு முருகன் ஆலயம் அமைப்பதாக இருந்தால் மட்டுமே நான் அங்கு வருவேன்" என்பதாகும். அது மட்டுமல்ல இலண்டனுக்கு வருவதற்கு முன் இந்தியாவுக்குச் சென்று கும்பகோணம் இராமன் என்ற சிற்பியிடம் முருகன் வள்ளி தெய்வானை சிலைகள் பற்றிய ஏற்பாட்டை செய்துவிட்டே வந்தார்.

இவர் இங்கு வந்தபோது இலண்டனில் மிகக்குறைந்த அளவு சைவமக்களே வாழ்ந்து வந்தார்கள். இங்கு வந்த சபாபதிப்பிள்ளை ஐயா அவர்கள் தமிழ் மக்களை ஒன்று திரட்டி வீடுகளில் சிவராத்திரி, நவராத்திரி, தைப்பொங்கல், தமிழ்வருடப்பிறப்பு போன்ற

சிறப்பான இந்து வழிபாடுகளை நடாத்தி வந்தார். 1974ஆம் ஆண்டு பிரித்தானிய சிவா அறநிலையம் தோற்றுவிக்கப்பட்டது. இது கோவில் அமைப்பதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபடத்தொடங்கியது. தொடர்ந்து ஐயா பல வழிகளில் நிதி சேகரித்தலிலும் ஈடுபட்டார். அக்காலத்தில் இங்கு நடைபெற்ற விவாக, இறுதி கிரிகைகளை நடாத்துவதன் மூலம் கிடைக்கின்ற நிதியைக்கூட இவர் இவ்வாலய கட்டிடத் திட்ட நிதிக்குச் சேர்த்தார்.

இதன் பின் ஏனைய சைவப்பெருமக்கள் ஒன்று கூடி விம்பிள்டன் கறட்றோட்டில் அமைந்துள்ள ஒரு கடையிலும் , பின்னர் வோப்பிள் றோட்டில் அமைந்துள்ள பிளாக் ஞாபகார்த்த மண்டபத்திலும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளிலும், ஏனைய சைவசமயச் சிறப்புத்தினங்களிலும் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்த வள்ளி தெய்வயானை சமேதரான கலியுகக்கடவுளாம் கந்தப்பெருமானுக்கு வழிபாடுகளை ஐயா அவர்களே முன்னின்று நடாத்தினார்.

இக்காலத்தில் கந்தப்பெருமான் இலண்டன் மாநகரில், தான் குடிகொள்ளப்போகும் குன்றை காட்டியருளினான். இவ்வறக்கட்டளை பல இடங்களிலும் கட்டிடத்தை தேடியலைந்த போது, கடைசியாக ஹைகேட் ஹில் (Highgate Hill) என்ற இடத்தில் எரிந்து உடைந்த நிலையில் இருந்த ஒரு கட்டிடத்தை முருகன் காட்டியருளினான். இக்கட்டிடத்தை மிகக்குறைந்த விலையில் வாங்கி சில ஆரம்பத்திட்ட வேலைகளின் பின் முருகன் ஆலயம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இலண்டனில் முதன்முதலாக ஒரு சைவப்பிராமணரை அழைத்து வந்து வைதீக முறைப்படி பூசை நடாத்திய பெருமை இவ்வாலயத்தையே சாரும். இதனைத் தொடர்ந்து ஐயா அவர்களின் இடைவிடா முயற்சியாலும், ஏனைய அன்பர்களின் இடைவிடா முயற்சியாலும், இவ்வாலயத்தின் கட்டிட வேலைகள் நடைபெற்று இப்பிரமாண்டமான உயர்வாசல் குன்று முருகன் ஆலயம் மிக வெற்றிகரமாக 1986 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் மிகக்கூடிய பக்தர்கள் முன்னிலையிலே 86 ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தன்று மிக விமரிசையாக நடைபெற்றது.

தொடர்ந்து இவ்வாலய வளர்ச்சியில் உங்களுடைய பங்கு என்ன என்று தலைவரிடம் கேட்டபோது, அவர் அளித்த விடையின் சாராம்சம் பின்வருமாறு– இவ்வறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, தான் இதில் உறுப்பினராக இருந்ததாகவும் இவ்வாலயத்தின் கட்டிடத்திற்குத் தலைவராகக் கடமையாற்றி வந்ததாகவும் குறிப்பிட்டார். ஆலய அமைப்பில் ஈடுபட்டிருந்த சிற்பிகள் சில தகராறுகள் காரணமாக ஆலய சிற்ப வேலைகளை அரையும் குறையுமாக விட்டு இந்தியாவுக்குப் போகும் ஒரு துர்ப்பாக்கிய நிலை 1983ஆம் ஆண்டளவில் ஏற்பட்டது. இதனால் ஆலய அமைப்பு வேலைகள் தடைப்பட்டது. 1984ஆம் ஆண்டு நான் கட்டிடத்திட்ட அமைப்புச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டேன். இத்தருணத்தில் முருகன் எனக்குத் தந்த பலத்தினாலும் ஏனைய செயற்குழு உறுப்பினர்களின் ஆதரவோடும் இந்தியா சென்று சிற்பிகளை அழைத்து எமது விடா முயற்சியால் இவ்வாலயத்தின் பணிகள் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன. இந்த ஆலயம் சைவமக்களின் ஒன்று சேர்ந்த முயற்சியின் வெற்றிச் சின்னம் என்று குறிப்பிட்ட தலைவர், இந்த முயற்சியில் தங்கள் தோள்களைக் கொடுத்தவர்களை எழுதப்போனால் அதை ஒரு புத்தகமாகவே வெளியிடலாம் என்று குறிப்பிட்டார். உங்கள் ஆலயத்திற்குப் பின்னர் திட்டமிடப்பட்ட பிள்ளையார் ஆலயம் முன்பாகவே கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்தத் தாமதத்திற்கு காரணம் என்ன என்று கேட்டபோது திரு வாமதேவன் பின்வருமாறு கூறினார்– முதலாவது கட்டிடம், முருகன் ஆலயக் கட்டிடம் முற்று முழுதாக மீளக் கட்டப்பட்டமை, இரண்டாவது, பிள்ளையார் ஆலயம் தனிமனித முயற்சி.



அங்கு எந்த ஒரு முடிவும் செயற்பாடும் திரு. இரத்தினசிங்கத்தின் கையில் மட்டுமே தங்கியிருந்தது. ஆனால் முருகன் ஆலயம் ஒரு அறக்கட்டளையின் கீழ் எந்த ஒரு முடிவும், தீர்மானமும் ஒரு குழுவின் தீர்மானமாக அல்லது முடிவாக இருக்க வேண்டிய நிலையிலிருந்தது. ஒரு வீட்டில் ஒரு திருமண வைபவத்தையோ , அல்லது ஏதாவது ஒரு வைபவத்தையோ வைக்கும் போதே எத்தனையோ இடிபாடுகள் வரு மென்றால் ஒரு ஆலயத்தின் எழுச்சியில் ஏற்படக்கூடிய தீர்மானங்களில் எத்தனை சிக்கல்கள் இருக்குமென்று நீங்களே எண்ணிப்பாருங்கள் என்று கூறினார். அது மட்டும் அல்லாமல் சிற்பிகளுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் இருந்த ஒற்றுமையின்மை மற்றும் நிதி சேகரிப்பில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் போன்றன, இவ்வாலயத்தின் கட்டிடப்பணிகளில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் என்று கூறினார்.

இவ்வாலயத்தின் பூசை நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்டபோது, இவ்வாலயம் தினமும் காலை 8 மணி தொடக்கம் 1 மணி (பி . ப) வரையும், மாலை 5 மணி தொடக்கம் 9.30 மணிவரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களிலும், ஏனைய சிறப்புத் தினங்களிலும் ஆலயம் சற்றுக் கூடிய நேரம் திறந்திருக்கும் என்றும் , தொடர்ந்து இங்கு மூன்று வேளைப் பூசை நடைபெறுவதாயும் கூறினார். இக் கோயிலில் நடைபெறும் சிறப்புத் தினங்களைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் இவ்வாலயத்தில் 15 நாள் வருடாந்த சிறப்புத் திருவிழா வருடந்தோறும் ஆனி உத்தரத்தில் முடியத்தக்கதாக நடைபெறும். இக்காலங்களில் தினமும் சிறப்பான அபிஷேகங்களுடனும் , அலங்காரங்களுடனும் சுவாமி பக்தர்களின் பஜனைகளுடனும் அழகான சப்பரத்தில் அமர்ந்து உள்வீதி வலம் வருவார். இத் திருவிழாக் காலத்தில் சிறப்பான பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருவதாகக் குறிப்பிட்டார். இதைத் தவிர தைப்பூசத்

திருவிழாவன்று பல பக்தர்கள் காவடியெடுத்து முருகனுக்கு தமது பக்தியையும் நேர்த்திக்கடன்களையும் செலுத்துவார்கள். மாத கார்த்திகை, மகா சிவராத்திரி, மாத சதுர்த்தி தினங்களிலும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். முருகப் பெருமானின் அருள் கூறும் சிறப்பு விரதமாம் கந்தசஷ்டி இவ்வாலயத்தில் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு, இறுதி நாளன்று சூரன் போர் மிக விமரிசையாக நடைபெற்று, அடுத்தநாள் கல்யாண மகோற்சவம் மிகக் கோலாகலமாக நடைபெறுகிறது.

சிவனுக்கு உகந்த சிவராத்திரி அன்று இரவில் எல்லா சாமங்களிலும் சிவனுக்கு விஷேச அபிஷேக ஆராதனைகளும், இவ்விரவில் பல இனிய கலைநிகழ்ச்சிகளும் பஜனைகளும் இடம் பெறுகின்றன. இறுதி நாளன்று நடைபெறும் ஆருத்திரா தரிசனம் கண் கொள்ளாக் காட்சியாகும்.

உலகமாதா ஆதிபராசக்தியின் ஒன்பது இரவுகளாகிய நவராத்திரி தினங்களில், ஒன்பது அடுக்கில் கொலு வைக்கப்பட்டு நாளுக்கொரு அலங்காரத்துடன் அன்னைக்கு வழிபாடு நடைபெறுகிறது. இந் நாட்களில் தினமும் ஏதாவது கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் ஏனைய கலை வகுப்புகள் சமூகப் பணிகள் பற்றிக் கேட்டபோது, திரு வாமதேவன் வருத்தத்தோடு குறிப்பிட்டது யாதெனில், இவ்வாலயம் அமைந்துள்ள பகுதியான ஆர்ச்வே, ஹைகேட் ஆகிய இடங்களில் தமிழ்க் குடிமனைகள் மிகக் குறைவாக இருப்பதாலும், இலண்டனில் பல பகுதிகளில் கலை, தமிழ் வகுப்புகள் நடப்பதாலும் ஆலயத்தில் 87ம் ஆண்டுகளில் தொடக்கப்பெற்ற தமிழ்க் கலை வகுப்புகள் வெற்றி பெறவில்லை என்றும் குறிப்பிட்டார். என்றாலும் கூட ஆலயத்துக்கு முன்பாக இருக்கும் ஆலயத்துக்குச் சொந்தமான வீடுகளின் திருத்தங்கள் முடியப்பெற்றதும் நூல் நிலையம் ஒன்றை அமைப்பது சம்பந்தமாகவும் கலைவகுப்புகளை மீள ஆரம்பிப்பது சம்பந்தமாகவும் எண்ணி வருகிறோம். இவ்வாலயத்தில் இரு மண்டபங்கள் உள்ளன. இந்த மண்டபங்களில் திருமண வைபவங்கள் , சிறிய கலாசார நிகழ்ச்சிகள் போன்றன இடம் பெறுகின்றன. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இவ்வாலய உருவாக்கத் திட்டத்தைக் கொண்டுவந்த, திரு சபாபதிப்பிள்ளை ஐயாவை கௌரவிக்கும் முகமாக நடுத்தளத்தில் அமைந்த கட்டிடத்துக்கு ஐயாவின் பெயர் சூட்டப்பட்டு ஒவ்வொரு வருடமும் அவரின் பிறந்த நாளன்று சிறப்பு பூசை நடாத்தப்படுகின்றது.

மற்றைய ஆலயங்கள் செய்வது போன்று அறப்பணிகள் பற்றிக் கேட்டபோது, 1983ம் ஆண்டு இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் 1985ம் ஆண்டு இங்கு வந்த போது, முதன்முதலில் அவர்களை அழைத்து வந்து, அவர்களுக்குத் தற்காலிக வதிவிடம் கொடுத்து ஏனைய உதவிகளையும் செய்தோம். இது மட்டுமல்ல இக்கோவில் மண்டபங்களை இலண்டனில் உள்ள தர்மஸ்தாபனங்கள் நிதி சேகரிக்கும் நிகழ்ச்சிகளுக்கு கேட்ட போதெல்லாம் ஆலயம் வழங்கி வருகின்றது. அது மட்டுமல்லாமல் ஈழத்தமிழர்களின் அமைதிக்காகவும், சுபீட்சத்திற்காகவும் பல சிறப்பு பூஜைகளையும், பிரார்த்தனைக் கூட்டங்களையும் காலத்துக்கு காலம் நடத்தி வருகின்றது. இவ்வாலயத்தின் சிறப்புகளில் மற்றும் ஒன்று காலத்திற்குக் காலம் சமயப்பெரியார்களை இந்து சமயத்தின் பிறப்பிடமாகிய இந்தியாவில் இருந்தும், இலங்கையிலிருந்தும் அழைப்பித்து நிகழ்ச்சிகளை நத்துவதாகும். இதனால் பிறநாட்டில் வாழ்ந்தாலும் மக்களிடையே சைவசமய உணர்வுகள், தமிழ் கலாச்சாரம் போன்றன அழியாமல் காக்கப்படுகின்றன. அத்தோடு இங்கு பிறந்த இளம் சமுதாயத்தினருக்கும் சைவசமயத்தின் தத்துவங்களை அறியும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

கடைசியாக தலைவர் அவர்கள் தமது ஆலயம் ஏனைய ஆலயங்கள், சைவ முன்னேற்றச் சங்கம் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்பு வைத்து அவற்றுடன் இணைந்து பல சைவசமய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதாகவும், 'கலசம்' சஞ்சிகைக்கும் அதன் ஆசிரியர் குழுவிற்கும் உயர்வாசல் முருகனின் ஆசி என்றும் உண்டு என்று கூறி விடைபெற்றார்.

## ஓம் சக்தி

'ஓம்' என்பது பிரணவ மந்திரம். இதுதான் சக்தியின் ஆதார ஸ்ருதி. ஓசையெல்லாம் அடங்கிப் போய் பிரம்ம முகூர்த்தமான விடியற் காலை வேளையில் , உங்கள் காதுகள் இரண்டையும் விரல்களால் இறுக மூடிக் கொண்டால் , இந்த சுருதியின் அனுபவத்தை உணரலாம். சங்கீதத்தின் 'ஸா - பா' சுருதிக்கு இதை ஒப்பிடலாம் .

'ஓம்' எனும் மந்திரம் பிரணாயாமத்தின் விளைவை உச்சரிப்பவர்களுக்குத் தருகிறது. 'ஓம்' என்று சொல்லும் போதே வயிறு சுருங்கி மூச்சு வெளியாகி , மீண்டும் உள்ளே செல்வதை உணரலாம் .

டிஸ்கோ, ராக் மியூசிக் போன்ற அதிர்வலைகளை அளவுக்குமீறி எழுப்பும் இசைகள் , உடம்புக்கும் மனதுக்கும் வேண்டாத விளைவுகளை உண்டாக்குவதாக விஞ்ஞானிகளே ஒத்துக் கொள்கிறார்கள். அதே சமயம் 'ஓம்' எனும் மந்திரத்தின் ஒலியலைகளை ஆராய்ந்து பார்த்ததில் , இது ரத்த அழுத்தத்தைச் சமன் படுத்துவதாகவும் , மன அமைதியை உண்டாக்குவதாகவும் தெரிய வந்திருக்கிறது.

தியானம் பயிலுபவர்கள் 'ஓம்' எனும் மந்திரத்தை உணாந்து செய்தால் படிப்படியாக மனம் ஒரு நிலைப்படுவதை உணர்வார்கள் என்று கூறத் தேவையில்லை.


அன்புமிக்க வாசகர்களுக்கு,

கலசம் உங்களுக்கொரு புதிய களம். நீங்கள் ஆரம்ப எழுத்தாளராக இருக்கலாம், அல்லது இது வரையில் எழுதாதவராகவும் இருக்கலாம் - எங்கள் சஞ்சிகை உங்கள் ஆக்கங்களுக்குக் களம் அமைக்கத் தயாராக உள்ளது. உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அவற்றின் தரம் கண்டு பிரசுரிப்போம். நீங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**THE EDITOR,**
**3 GAYFERE ROAD, CLAYHALL, ILFORD,**
**ESSEX , IG5 OJG**

# நாயன்மார் சேவைகள் நாம் தொடர்ந்தோம்

கவிஞர் ஞானமணியம்



சிறுதுளிகள் பெருகிவரும் வெள்ளமாகும்!
திரளுமலை புரளுமொரு கடலுமாகும் !
உறுதுளிகள் சிறுமையெனல் மடமையாகும்!
உலகுநிதம் உணருமிதை உண்மையாகும்!

தருணமிது தன்னிலுறும் இனியநெஞ்சம்
தானது கனிந்துதவும் அரியதஞ்சம்
கருணைமிகு காசுநிதி கடுகென்றாலும்
கைதொழுது கருதுமுயர் கடமைசெய்வோம்!

திருவழியில் அரியபணி செய்யவந்தோம்!
சிவநெறியும் செந்தமிழும் உய்யவந்தோம்!
தெருவழிகள் தினமணுகித் தேடிவந்தோம்!
சிவநேசர் இல்லமது நாடிவந்தோம்!

யாசித்து நம்மிறைவன் நாமம் சொல்லி
ஞாலத்தில் இந்துமறை நாயன்மார்கள்
நேசித்து நீடுமருள் வரமிரந்தார்!
நீடித்து அவர்சேவை நாம்தொடர்ந்தோம்!

( நேசக் கரம் நீட்டி நிதிஉதவி நாடிவரும் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் திருப்பணிச் சேவைகளைப் பாராட்டி ஊக்குவித்து ,லண்டன் பண்டைத் தமிழ்க் கிராமிய அரங்கம் வெளியிட்ட பாமடல்)

# ஔவை அமுதம்



**ஔ**வையார் அரசர்களுக்கும் பாடியுள்ளார். ஆண்டிக்கும் பாடியுள்ளார். வளரும் இள உள்ளங்களுக்கும் தமிழால் அறிவுரை சொல்லியுள்ளார். மற்றவர்களுக்கும் வாழ்வியலைப்பற்றி வளமான தமிழில் கவி தந்துள்ளார். ஔவையின் பாடல்கள் அரண்மனை அத்தாணி மண்டபத்திலும் உருவாகியுள்ளது. வயல் வரப்புகளிலும் மரத்தடியிலும் மலர்ந்து மங்காமல் மனதைக் கவர்ந்து நிற்கின்றன.

ஔவையார் பாடிய பல தனிப் பாடல்கள் சுவையான கதைகளையும் சம்பவங்களையும் அதன் பின்னணியில் கொண்டுள்ளன. இவ் இதழில் இத்தகைய இரண்டு நிகழ்ச்சிகளை ஔவையின் பாடலைக் கொண்டு விவரிக்க முனைகிறேன்.

## *கூன்பலா தழைக்கப் பாடியது.*

இரண்டு மனைவியருடன் வாழ்க்கை நடத்தி வந்தான் ஒரு குறவன். ஒருத்தி வயதில் இளையவள். இவள் மீது குறவனுக்கு மிகுந்த அன்பு இருந்தது. இதன் காரணமாக மூத்த குறத்தி பல துன்பங்களுக்கு உட்பட்டு வருந்த நேர்ந்தது.

குறவன் வாழ்ந்து வந்த குடிசையின் ஓரத்தில் ஒரு பலாமரக் கன்று வளர்ந்து வந்தது. இப் பலாக்கன்று நேராக வளராமல் வளைந்து கூனல் உள்ளதாக நின்றது. இருப்பினும் குறவன் இதனை அருமையுடன் கவனமாக வளர்த்து வந்தான். ஒரு நாள் குறவன் மற்றொரு ஊருக்குப் போகவேண்டி வந்ததால் தனது இரண்டு மனைவியரிடமும் பலாக் கன்றைக் கவனமாகப் பார்க்கும்படி வேண்டிச் சென்றான்.

குறவன் போனபின் இளைய குறத்தி, மூத்த குறத்திக்கு துன்பம் உண்டாக்க எண்ணி வேண்டுமென்றே பலாக்கன்றை குறுக்கே வெட்டிவிட்டு, மூத்தவள்மேல் பழியைப் போட்டாள். மூத்த குறத்தி என்ன செய்வது என்று புரியாமல் , குறவன் திரும்பி வந்தால் என்ன நடக்குமோ என அஞ்சி நடுங்கினாள்.

மறு நாள் ஔவையார் குறவன் வீட்டின் வழியே போக நேர்ந்தது. கவலையுடன் இருந்த மூத்தகுறத்தியைக் கண்டு என்ன நடந்தது எனக் கேட்டு பலாக் கன்றுக்கு நேர்ந்ததை அறிந்தார்.

ஔவை மூத்தகுறத்தியின் துயரத்தை நீக்க எண்ணினார்.தான் தனது ஆத்தி சூடியிலும் , கொன்றை வேந்தனிலும் , நல்வழிப் பாடல்களிலும் வற்புறுத்திச் சொன்ன அறக் கொள்கையின் வழியில் பிறர் துயரைத் துடைக்க தனது தமிழ்க் கவிதையை துணைக்கழைத்தார்.

அவர் பலாக்கன்றைப் பார்த்தார். மனம் வருந்தினார். தனது மனத்தில் பலாக்கன்று செழிப்பான மரமாக உயர்ந்து வளர்ந்து காட்சிதர வேண்டுமென எண்ணிப் பாடலானார்.

கூரிய வாளாற் குறைத்திட்ட கூன்பலா<br>
ஓரிதழலாய்க் கன்றா யுயர்மரமாய் – சீரியதோர்<br>
வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்<br>
பண்டுபோ னிற்கப் பலா

கூருள்ள வாளால் குறைப்படுத்தப்பட்ட கூன்பலாக்கன்று பழையபடி தழைக்க வேண்டும். இக்கன்று ஓர் இதழாக, கன்றாக, உயர்ந்த மரமாக,வளரவேண்டும் . இதன் காய்களில் வண்டுபோன்ற கொட்டை உள்ளதாக செழிப்பாக இருக்க வேண்டும். இதன் பழங்கள் சுவையுள்ள உண்ணத்தக்கதாக தொங்க வேண்டும். என்கின்ற நினைப்பில் மூத்த குறத்தின் மனத்துயரைப் போக்க வேண்டும் என்கின்ற நல்லெண்ணத்துடன் இப்பாடல் பாடப்பட்டது.

உடனே பலாக்கன்று ஔவைத் தமிழ்ப்பாட்டில் சொன்னபடி வளர்ந்து நின்றது. இதைக்கண்டு மூத்த குறத்தி கவலை அகன்று வியந்து ஔவையாரை வணங்கினாள்.
தனது மனக்கவலையைப் போக்கிய ஔவைக்கு தன் அன்பைத் தெரிவிக்க வேண்டுமென எண்ணி ஒரு கொத்து தினை அளந்து கொடுத்தாள். ஔவையும் இதனை ஏற்றுக் கொண்டாள்.
இளைய குறத்தி அன்று முதல் அஞ்சி அடங்கி இருந்தாள்.

## *உப்புக்கும் புளிக்கும் பாடுதல்*

ஊரூராகச் சென்று அரசர்களுடனும் பின் சாதாரண பொது மக்களுடனும் இன்புடன் உறவாடும் ஔவையின் தோளிலே ஒரு பை எப்போதும் தொங்கிக் கொண்டிருந்தது.

**ஆனந்தி**

சோழ மன்னனுடைய அத்தாணி மண்டபத்திலே பல மந்திரிகள் , புலவர்கள் , சோதிடர்கள்,மற்றும் பெருமக்கள் அமர்ந்திருந்த ஆசனங்களிலும் பார்க்க உயர்ந்த ஆசனத்தில் ஔவையை சோழவேந்தன் அமர்த்தி மரியாதை செலுத்தினான். ஔவையின் தோள்ப் பையில் என்ன இருக்கும் என்பதை அறிய சோழ மன்னன் மனம் ஆவல் கொண்டது.

பாட்டி! மன்னர்களுக்குரிய பெருமைமிக்க சபையிலே ஒப்பற்ற ஆசனத்திலே அமர்ந்திருக்கிறீர்கள். இருப்பினும், கேவலம் ஒரு குறத்தியைப் போல நாடோடியைப் போல ஒரு முடிச்சுப் பையை நீங்களும் தொங்க விட்டுள்ளீர்களே. அந்தப் பைக்குள் என்ன வைத்திருக்கிறீர்கள். எனக்கு அறிந்துகொள்ள ஆசையாக இருக்கின்றது சொல்வீர்களா ? என்று மன்னன் கேட்டான்.

சிறுபிள்ளைகள் கேள்விகள் கேட்டு அது என்ன ? இது என்ன ? என்று தெரிந்து கொள்ள விரும்புவது போல மன்னனும் கேட்டதை உணர்ந்தார் ஔவையார். குழந்தைக்குத் தாய் பதில் சொல்லும் மனப்பான்மையில், கவித் தமிழில் பதில் சொல்ல முற்பட்டார். ஔவையார். சோழ மன்னனே சொல்லுகிறேன் கேள்! ஒரு குறத்தி, கூன்பலா தழைக்க நான் பாட்டுப்பாடிய போது எனக்கு மூன்று உழக்கும் ஒரு உழக்குமாக அளந்து ஒரு கொத்து தினை தந்தாள். மற்றும் இடங்களில் ஏழைகள் மத்தியில் இன்னொரு பாட்டுப் பாடியபோது ஒருத்தி உப்புத்தந்தாள். இன்னொருத்தி ஒரு புளி உருண்டை தந்தாள். இவர்கள் எல்லோரும் அன்புடன் தந்த பரிசுகளை கைவிடாமல் என்னுடைய பையிலே கொண்டு திரிகிறேன் பார் என்று தமது முடிச்சுப் பையிலிருந்த பண்டங்களையும் காட்டியவாறே , உயர்ந்த பண்பாட்டையும் விளக்கி பின்வரும் செந்தமிழ்ப் பாட்டைப்பாடி மன்னனின் கேள்விக்கு விடை கொடுத்தார்.


கூழைப் பலாத்தழைக்கப் பாடக் குறமகளும்<br>
மூழக் குழக்குத் தினைதந்தாள் – சோழாகேள்<br>
உப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை<br>
ஒப்பிக்கு மென்ற னுளம்.

நாமும் எமது கல்வி அறிவு வசதி , வாய்ப்புகள் ,மற்றும் இறை அருளா கிடைத்துள்ள வாழ்க்கைச் சுகங்களை எல்லாரும் பயனடையத் தக்கவாறு பகிர்ந்து வாழ்வோமாக

**ஔவை மீண்டும் வருவாள் – தமிழமுதம் தருவாள் – அடுத்த இதழில்**

# பாரதி ஒரு தெய்வீக சமுதாயக் கவிஞனா ?

## – பாரதிப்பித்தன் –



முதலாவது கலசத்தில் பாரதியாரின் தோத்திரப் பாடல்களிலே தொக்கி நின்ற சமுதாயப் பார்வைகளை நோக்கினோம். இம்முறை அவரின் ஞானப்பாடல்களை நோக்கலாம் என்று நினைக்கிறேன்.

தோத்திரப்பாடல்கள் பெரும்பாலும் ஆண்டவனைப் போற்றியும் விழித்தும் பாடப்படுபவை ஆகும். ஞானப்பாடல்கள் மேலும் ஒரு படி சென்று ஆத்மீகக் கண்கொண்டு ஆண்டவனை அக உணர்வுகளினூடாகப் பார்ப்பதாகும். ஏனையவர்களின் ஞானப்பா டல்களோடு ஒப்பிடும் போது பாரதியாரின் ஞானப்பாடல்கள் நிரம்ப வித்தியாசமானதாகும். ஏனென்றால் தான் வாழும் சமுதாயத்தை மட்டுமல்லாது உலக சமுதாயத்தைத் தன் பார்வைக்குள் உள் அடக்குவதாகும். ஆத்மீகக் கண்ணோட்டம் என்பது சமயக் கண்ணோட்டத்தில் இருந்து வேறுபட்டதாகும். ஆத்மீகக் கண் ணோட்டம் ஆழ்ந்த நம்பிக்கையை அடிப்படையாக வைத்து உயர்ந்த நோக்குகளை நோக்கி எண்ணங்களை வளர்த்து இறை உணர்வுகளினூடாக மெல்ல மெல்ல நகர்ந்து செல்லுதல் என்று பொருள் கொள்ளலாம். இறை நம்பிக்கை அற்ற ஒருவன் ஆத்மீகப் பார்வை கொண்டவனாக முடியுமா என்ற வினா எழுந்தால் ஆம் என்பது தான் விடை. ஏனென்றால் அடிமனதின் ஆழத்தில் எழுகின்ற ஆத்மீக உணர்வுக்கு இறை நம்பிக்கை அவசியம் என்று எப்படிச் சொல்ல முடியும் ? தன்னைத் தானே நம்புகின்றவன் அந்த நம்பிக்கையை தன் அடிமனதில் இருந்து எழுப்ப முடிந்தால் அந்த அறை கூவல் அவனைப் பொறுத்தவரை ஆத்மீக அறை கூவல்தான்.

இந்தக் கண்ணோட்டத்தில் தான் பாரதியாரின் ஞானப் பாடல்களை அணுக வேண்டும் என்பது எனது எண்ணம். பாரதி 'அச்சமில்லை' என்ற தன்னுடைய பாட்டில்

*.....உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்*
*அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே. ........*

என்று அழகாகப் பாடுகின்றார். இங்கே தான் பாரதியாரின் அசைக்க முடியாத ஆழ்ந்த நம்பிக்கையை உணர்ந்துகொள்ளலாம். உச்சிமீது வானிடிந்து விழட்டுமே எனக்கென்ன என்கின்ற துணிவு நிறைந்த ஆழ்ந்த, நம்பிக்கை பொதிந்த, பாரதியாரின் முடிவு எம்மை வியக்கவைக்கின்றது. இன்னுமொரு பாடலைப் பார்ப்போமாயின்,

***கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்***
***கவர்ந்திட மாட்டாவோ – அட***
***மண்ணில் தெரியுது வானம்,அதுநம்***
***வசப்பட லாகாதோ ?***
***எண்ணி எண்ணி பல நாளு முயன்றிங்***
***கிறுதியிற் சோர்வோமோ! – அட***
***விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலும்***
***மேவு பராசக்தியே ..... என்று கூறுகின்றார்.***

இந்தக் கவிதையிலே மனதினுடைய கட்டுப்பாடற்ற நினைவுகள் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதில் ஆண்டவனுடைய இருப்புப் பற்றிய தெளிவு ஆன்மாவுக்கு இல்லாதிருப்பதை முதல் ஆறு வரிகளிலும் தெளிவாகக் கூறும் பாரதியார் ஆண்டவன் எங்கெங்கு இருக்கின்றான் என்று ஆன்மாவுக்கு உணர்த்துவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது பாரதி கூறுகிறான் விண்ணில், மண்ணில், கண்ணில், எண்ணில் எல்லாம் நீயாக இருக்கின்றாய். இப்படி எல்லாமாக நீ இருக்கும் போது எம்முள்ளும் நீ இருக்கின்றாய் என்பதை மறந்து கண்ணில் தெரிபவைகளையும், மண்ணில் தெரிபவைகளையும் நிஜம் என்று நினைந்து எமது நேரத்தை விரயம் செய்கின்றோம் என்று மிகத் தெளிவாக எமக்கு உணர்த்துகின்றார். தொடர்ந்து பாரதியின் ஞானப்பாடல்களைப் பார்க்கும் போது 'அறிவே தெய்வம்' என்ற கவிதையிலே

*ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்*
*உணர்வெனக் கொள்வாயே என்கிறார்.*

அதாவது பிரமம் ஒன்று தான் அதை எங்கும் தேடாதே , உன் உணர்வு தான் அது என்கிறார். பின்பு 'பரசிவ வெள்ளம்' என்ற கவிதையில்

*உள்ளும் புறமுமா யுள்ளதெல்லாந் தானாகும்*
*வெள்ளமொன்றுண்டா மதனைத் தெய்வமென்பார்.*

என்றும்

*வெட்ட வெளி யாயறிவாய் வேறுபல சக்திகளை*
*கொட்டுமுகிலாய் அணுக்கள் கூட்டிப் பிரிப்பதுவாய்*

என்றும் பிரம்மத்தை எங்களுக்கு உணர்த்திக் காட்டிவிட்டு தொடர்ந்து

***காவித் துணி வேண்டாம் கற்றைச் சடை வேண்டா***
***பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே.***
***சாத்திரங்கள் வேண்டா சதுர்மறைகள் ஏதுமில்லை.***
***தோத்திரங்கள் ஏதுமில்லை உளம்தொட்டு நின்றால் போதுமடா***
***தவமொன்றும் இல்லை ஒரு சாதனையும் இல்லையடா.***
***சிவமொன்றே உள்ளதென சிந்தை செய்தால் போதுமடா***

என்று எவ்வளவு ஆணித்தரமாக கூறி முடிக்கின்றார். பாடப்பாட நெஞ்சினிக்கும். பாரதியின் ஞானப்பாடல்கள் கூறும் தத்துவ விளக்கங்கள் ஏராளம். **'நான்'** என்றதொரு கவிதையைப் பார்ப்போம் நான் என்பது யார் என்று கூறுகின்றார்.

பறவைகள்............விலங்குகள்.........மரங்கள்.......காற்று......புனல்.........கடல்.......விண்மீன்கள்......வெட்ட வெளி......புழு........கவி.......உரு.......மாடகூடம்.... எழில் நகர் கோபுரம் இன்னிசை ........இன்பங்கள் .......மானிடரின் பொய்கள்.........துன்பங்கள்......கோடிமந்திரங்கள்........இயங்கும் பொருள்கள்.........சாத்திரங்கள்....... நான் என்கின்ற ஆணவம் ........ ஆகிய எல்லாப் பொருள்களுமே நான் என்று கூறி தொடர்ந்து ...........அறிவாய் விளங்கும் முதற் சோதியே நான் என்று முடித்துவிடுகின்றார்.

மிகவும் எளிமையாக சுவையாக ஆத்மீகத் தத்துவங்களை பாரதியின் ஞானப்பாடல்கள் எமக்கு அள்ளித் தருகின்றன.

இவற்றின் சுவையை தொடர்ந்து வரும் கலசங்களில் மேலும் மேலும் பருகுவோம்.

"ஒரு குளத்துக்கு நான்கு படித்துறைகள். இந்துக்கள் ஒரு துறையில் இறங்கி நீரைப் பருகிவிட்டு அதைத் 'தண்ணீர்' என்கின்றனர். முஸ்லீம்கள் இன்னொரு படித்துறையில் நீரைப் பருகிவிட்டுப் 'பானி' என் கின்றனர். கிருத்தவர்களோ அடுத்த படித்துறையிலிருந்து 'வாட்டர்' எனகின்றனர். மற்றொரு படித்துறையில் இருப்பவன் 'ஆகுவா' என்கிறான். தண்ணீர் என்னவோ ஒன்றுதான். *அதுபோல இறைவன் ஒருவனே! அவனுக்கு நாமங்கள்தான் பல* "
*– பகவான் ராமகிருஷ்ணர் –*

# சிவநெறிச் செல்வர்கள்

## *காரைக்காலம்மையார்*

**பிறந்தமாதம்: பங்குனி**
**நட்சத்திரம் : சுவாதி**
**வாழ்ந்த ஊர்: காரைக்கால்**

தனதத்தன் என்ற வணிகரின் ஒரே மகளாகப் பிறந்த புனிதவதி பருவத்தை அடைந்த நிலையில் பரமதத்தன் என்பவனின் இல்வாழ்க்கைத் துணைவியாக இல்லறமென்னும் நல்லறமேற்றாள். சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே சிவபெருமானைப் போற்றுவதையும் சிவனடியாரை உபசரித்து ஏற்றன செய்வதையும் தனது சிறுபிராய கடமையாகக் கொண்டிருந்தாள்.

அது மண வாழ்க்கையிலும் இரட்டிப்பாகப் பரிணமித்தது. இளமையும் – இனிமையும் – புதுமையுமாக இல்வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்த ஒரு நாள் புனிதவதி என்னும் இளநங்கை பிறவா பேரின்ப நிலை எய்திடும் உன்னதத்திற்கு வழிவகுக்கும் நாளாக அந்நாள் அமைந்தது. வணிக வாடிக்கையாளர் ஒருவர் கொடுத்த இரு மாங்கனிகளை பரமதத்தன் ஊழியன் ஒருவன் மூலம் இல்லத்திற்குக் கொடுத்தனுப்பினான். அதில் ஒரு பழத்தை அப்போது விருந்தினராக வந்து உணவருந்திக் கொண்டிருந்த சிவனடியாருக்குப் புசிக்க அளித்துவிட்டாள்.அவரும் அதைச் சுவைத்து உண்டவராக வாழ்த்திச் சென்று விட்டார்.

வழக்கம்போல் நண்பகல் உணவுக்குப் பரமதத்தன் தன் இல்லத்திற்கு வந்தான். எஞ்சியிருக்கும் மற்றொரு மாங்கனியைப் படைத்தாள். அதன் சுவை உணர்வு தூண்ட மற்ற மாங்கனியையும் கேட்டான். கைபிசைந்து நின்ற புனிதவதி , தன் இடர்ப்பாடான நிலையை மகேசனிடம் மானசீகமாக எடுத்துரைத்துப் பிரார்த்தித்தாள். கணவனோ சிவனடியார் உபசரிப்பை எதிர்ப்பவன்......உண்மையையும் கூற முடியாதநிலை.

பக்தையின் வேண்டுகோளுக்கு பரமன் செவிசாய்த்தான். புதிய மாங்கனியொன்று அவள் கையை வந்தடைந்தது. அதனை உண்ட வணிகனோ அதன் வேறுபாடான சுவையறிந்து, அதுபற்றி மனைவியைக் கேட்டறிந்து உண்மையை உணர்ந்தான்.

அக்கணமே மனைவியின் தெய்வீக சக்தியைப் புரிந்து கொண்ட அவனால், அவளை மனைவியாக மதித்து கணவனாக வாழ மனம் ஒப்பவில்லை. அவளைப் பிரிந்து உடனடியாக வெளிநாடு சென்று விட்டான். கணவனின் பிரிவுக்கான காரணத்தை உணர்ந்த பேதையான புனிதவதி பித்தனான சிவனைத் துதித்து எழிலுருவான தசைத் திரள் மறைந்திட எலும்புருவான பேய் உருவம் வேண்டினாள்.

அவள் பிரார்த்தனை நிறைவேறியது. எலும்புரு பெற்ற புனிதவதி சுடலை வாசனான கயிலையம்பதியை தரிசிக்க கயிலாயம் நோக்கி பயணமானாள். கயிலாயம் கங்கை சடையானின் இருப்பிடம் அன்றோ.! அங்கே காலூன்றி நடக்க அவள் மனம் ஒப்பவில்லை. தலையைக் கீழேபதித்து தலைகீழாக நடந்து எம்பெருமானைத் தரிசித்தாள். 'காரைக்கால் அம்மையே ' என்று கனிவுடன் கூறி அழைத்து வரவேற்று தமிழகத்திலுள்ள திருவாலங்காட்டில் தனது தெய்வீக திருநடனத்தையும் நிகழ்த்திக்காட்டி , நடராஜகோலத்தில் அம்மையாரை ஆட்கொண்டார் ஈசன்.

**– சிவாயன் –**

# திருமுறைத் தேன் பருகிப் பாரீர்

**–ஆதிரை–**

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

நமச்சிவாயத் திருப்பதிக முதலாம் பாடல்
அஞ்செழுத்துண்மை

அப்பர் சுவாமிகளுக்கு சமணர்கள் இழைத்த கொடுமைகளால் அவர் சிறிதும் துன்பப்படாமல் திருமுறையின் துணை கொண்டு சிவப்பொலிவுடன் திகழ்வதைக் கண்டபின், உண்மையை உணராத பல்லவ மன்னனும், சமணர்களும் அடுத்து என்ன செய்வது என எண்ணலானார்கள்.



கல்லுடன் சேர்த்துக்கட்டிக் கடலில் பாய்ச்சுவதே நாவேந்தனைக் கொல்லச் சிறந்த வழி எனச் சமணர்கள் சொல்லக் கேட்ட பல்லவ வேந்தன் அவ்வாறே செய்யுங்கள் எனக் கட்டளை இட்டான். நாயனாரைச் சமணர்கள் கல்லுடன் கட்டி படகில் ஏற்றிக் கொண்டு போய் நடுக்கடலில் தள்ளிவிடுகிறார்கள்.

அப்பொழுது திருநாவுக்கரசர் "எவ்வாறாயினும் ஆகுக! அடியவன் எந்தை பெருமானாகிய சிவனை ஏத்துவேன்" என்கின்ற அசையாத நம்பிக்கையுடன் திருவைந்தெழுத்தின் சிறப்பினைப் போற்றிப் பாடினார். தனக்கு நடந்த இவ்வனுபவத்தை மற்றொரு இடத்தில் திருநாவுக்கரசு நாயனார் பின்வருமாறு பாடியுள்ளார்:

"கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லும் நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே"

இவ்வாறு கல்லுடன் பூட்டப்பட்டு கடலில் வீசப்பட்ட அப்பர் சுவாமிகள் சிவபெருமானின் நமசிவாய எனும் நல்ல நாமம் எத்துணைப் பெருமையுடையது என்பதைத் தமக்கே உரிய இனிய தமிழ்ப் பாடல்கள் பத்தினால் சைவ உலகிற்கு உரைத்து வைத்துள்ளார். இத்தேவாரப் பதிகத்தின் முதலாம் பாடல் பின்வருமாறு:

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே.**

*சொல் துணை – துணைசொல்* – உயிர்களுக்கு ஏற்ற துணை என்று செல்லப்படுகின்ற

*வேதியன்* – வேதங்களை அருளியவனும், வேதத்தின் உட் பொருளாக இருப்பவனும்

*சோதி* – ஒளி வடிவாக, ஞானப் பிழம்பாக விளங்குகின்றவனும்

*வானவன்* – தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கின்ற

இத்தகைய பெருமை வாய்ந்த சிவபெருமானுடைய

பொற்றுணைத் திருந்தடி – பொன்/ திருந்து/ துணை/ அடி

*பொன்* – பொன் போன்ற

*திருந்து* – அழகு பொருந்திய

*துணையடி* – இரண்டு திருப்பாதங்களையும்

*பொருந்த* – மனதிலே நிலைபெறும் படி எண்ணி

*கைதொழ* – கைகளைச் சேர்த்து வழிபட்டால்

*கல்துணை* – கல்லையே துணையாகப் பாவித்து

*பூட்டி* – ஒன்றாகச் சேர்த்துக் கட்டி

*ஓர்* – ஒப்பற்ற – ஆழமான

*கடலிற் பாய்ச்சினும்* – கடலிலே இட்டாலும்

*நல்துணையாவது* – சிறந்த பாதுகாப்பாக உதவுவது

*நமச்சிவாயவே* – ந, ம, சி, வா,(வ) ய என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

நாவுக்கரசரை சமணர்கள் கடலில் போட்ட போது தமது முதலாவது பாடலிலேயே சிவபெருமா னுடைய பெருமையையும் விளக்கி, அச் சிவனுக்குகந்த நாமம் நமசிவாய என்பதே எனத் தெளிவாக்குவதை நாம் இப் பாடலைப் பாடும் தோறும் உணரவேண்டும்.

துணை சொல் எனும் இரு சொற்களால் உயிர்களுக்கெல்லாம் உற்ற துணையாக சிவபெருமான் வேதங்களிலும், ஆகமங்களிலும் சொல்லப்படுகிறான் என எமக்கு நினைவுபடுத்துகிறார்.

வேதியன், சோதி, வானவன் ஆகிய தொடர்கள் எம்பெருமானுடைய பெருமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

நான்கு வேதங்களின் தலைவனாகவும், அதை அருளியவனாகவும், இவ் வேதங்களின் உட்பொருளாகவும் இறைவன் இருப்பதால் வேதியன் என சிவனை சுட்டிக்காட்டிப் பெருமைப்படுகிறார்.

ஞான ஒளியாய் இருந்து ஞானியர்க்கு ஆனந்தத்தை அளிக்கும் சிவனது வடிவத்தினை சோதி என பல திருமுறைகளில் நூற்றுக்கணக்கான இடங்களில் அடியார்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச் சுடர், ஒளிவளர் விளக்கு, சோதியே சுடரே, நீக்காத பேரொளி, தொழ நின்ற பரஞ்சோதி, தூண்டு சுடர் மேனி, திகழொளி, என்றும் இன்னும் பலவாறும் சிவனது ஞானத் திருமேனியைத் திருமுறைகளில் தேவார முதலிகளும், மணிவாசகரும் மற்றும் திருமுறை ஆசிரியர்களும் பாடிப் பரவியுள்ளனர். இதனையே அப்பர் சுவாமிகளும் சோதி எனக் குறிப்பிட்டுள்ளார்.

மும்மூர்த்திகளும், பூதகணங்களும், சப்த ரிஷிகளும், இந்திரன் முதலாம் எட்டுத்திக்கு தேவர்களும் மற்றும் விண்ணவர்களுக்கும் தலைவனாய் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் சிவனை வானவன் எனச் சொன்னார்.

இத்தகு பெருமையுள்ள எமது சிவனாரது திருவடிகளை திண்ணமாக எமது மனதில் கொண்டு வழிபட்டால் எமக்கு எந்நேரமும் உகந்த துணையாக அவனது மகிமை மிக்க ஐந்தெழுத்து தொடர்ந்திருக்கும்.

சிவபெருமானின் திருநாமமாகிய நமசிவய என்பது மூலமந்திரமாகும். இதன் பொதுவான கருத்து சிவபெருமானுக்கு வணக்கம் என்பதே. நமசிவய எனும்போது சிவ என்னும் இறைவனின் பெயரைப் பின் வைத்து ஆன்மாவின் வணக்கத்தை நம என முதலில் சொல்கின்றோம்.

சிவயநம என்று உச்சரிக்கும் பஞ்சாட்சரத்தில் சிவ என்னும் இறைவன் பெயரை முன்வைத்து, நம என்னும் ஆன்மாவின் வணக்கத்தைப் பின்பு கூறும் சிறப்பினைக் காணலாம்.

நமசிவய என்பது தூல பஞ்சாட்சரம் எனப்படும். இது உலகியல் நன்மைகளைக் கருதி ஓதப்படுவது. சிவயநம என்பது சூட்சும பஞ்சாட்சரம் எனப்படும். இதை ஓதுவதால் சிவகதிக்கு, வீடு பேற்றிற்கு ஆன்மா பக்குவமடைகின்றது.

சி வ ஆகிய இரண்டு எழுத்துக்களும் இறைவன் சம்பந்தப்பட்டவை, ந ம ஆகிய இரண்டு எழுத்துக்களும் மலத்தைக் குறிப்பன. ய எனும் தனி எழுத்து ஆன்மாவைக் குறிக்கின்றது.

சிவனின் திருவருளைப் பெற விருப்பம் ஏற்படுகின்ற ஆரம்ப நிலையில் ஆன்மா மலத்தின் வலிமையால் இறைவனுடைய திருவருளை உணரமுடியாமல் இருக்கின்றது. நம என்னும் மலத்தினைக் குறிக்கும் எழுத்துக்கள் சிவ என்னும் இறைவனைக் குறிக்கும் எழுத்திற்கு முன்னே நின்று மலத்தின் வலிமையைக் காட்டுகின்றது.

நமசிவாய மந்திரத்தின் உண்மையை உணர்ந்து ஓதி வரும் போது மலங்கள் செயல் இழந்து இறைவனருள் உயிரை நெருங்குகிறது. மலங்கள் பின்னே தள்ளப்பட்டு திருவருள் முதன்மை அடையும் போது சிவயநம என்னும் நுண்மைப் பஞ்சாட்சரம் தோன்றுகிறது.

ஆன்மா தொடர்ந்து இறையருளுடன் கூடியிருக்கின்ற போது மலங்கள் நீக்கப்படுகிறது. இதனால் நம என்னும் எழுத்துக்கள் மறைந்து ஆன்மாவாகிய ய என்னும் எழுத்தின் இரு புறமும் சிவ என்னும் எழுத்துக்கள் அமைகிறது. அப்போது சிவயசிவ என்னும் பஞ்சாட்சர மந்திரம் நிலைபெறுகிறது.

சிவனருள் ஒன்றால் மட்டுமே ஆன்மா சூழப்பட்டுள்ளதைச் சிவயசிவ என்னும் மந்திரம் குறிக்கின்றது.

அடுத்த நிலையில் சிவயசிவ வில் உள்ள ய வும் போய் உயிர் சிவ மயமாக நிற்கும் போது சிவசிவ எனும் நிலையை அடைந்து இறுதியில் சி என்னும் முத்திப் பஞ்சாட்சரத்தில் ஆன்ம ஒடுக்கம் உண்டாகிறது. இதனைப் பின்வருமாறு காட்டலாம்:

<u>சிவயநம</u>
<u>சிவயசிவ</u>
<u>நமசிவய</u>
<u>சிவசிவ</u>
<u>சிவ</u>
<u>சி</u>

வேதங்களிலும் ஆகமங்களிலும் மற்றைய சாத்திரங்களிலும் உள்ள எல்லா எழுத்துக்களும் சிவபெருமானுடைய திருவைந்தெழுத்திலுள்ள சி என்னும் ஒரு எழுத்துக்குள் அடக்கம். இவ்வெழுத்தை ஓதிவந்தால் மரக்கலமாக இருக்கும் எமது உடம்பு, கரையாகிய இறைவனின் திருவடியினை அடையும். இதனைத் திருமூலர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

**அங்கமும் ஆகம வேதம தோதினும்**
**எங்கள் பிரானெழுத் தொன்றில் இருப்பது**
**சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்**
**அங்கரை சேர்ந்த அருங்கல மாகுமே.** ***(திருமந்திரம்)***

இத்தகு பெருமை வாய்ந்த திருவைந்தெழுத்தின் சிறப்பினை மனதில் கொண்டு தூய தமிழ்ப்பாடல்கள் பத்தால் சிவனார் திருவடியை அப்பர் சுவாமிகள் வணங்கினார். திருநாவுக்கரசரைப் பிணித்திருந்த கல், தோணியாக மாறி அவரைக் கரை சேர்த்தது.

இவ்வதிசயத்தைச் சேக்கிழார் பெருமான் பாடும் போது, நல்வினை, தீவினை என்னும் கயிறுகளாலும், ஆணவம் என்னும் கல்லாலும் இறுகக் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்கள் எல்லாம் பிறவி எனும் கடலில் வீழ்ந்து தத்தளிக்கும் போது அவ்வான்மாக்களுக்கு அருள் தந்து கரை சேர்க்கவல்லது திருவைந்தெழுத்தே என்று சொல்கின்றார்.

**இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்**
**வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட**
**அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்**
**ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ ?**

திருநாவுக்கரசரைப் போன்றே திருஞானசம்பந்தரும் திருப்பெருமணத்தில் பேரொளிப் பிழம்பில் கலக்குமுன் காதலாகிக் கசிந்து

கண்ணீர் மல்கி என ஆரம்பிக்கும் பதினொரு பாடல் கொண்ட நமச்சிவாயத் திருப்பதிகம் அருளிச்செய்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் திருத்தலத்தில் உள்ள சிவனை **மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்** என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடியுள்ளார்.

அழுதழுது அடி சேர்ந்த மணிவாசகப் பெருமான் சிவனது அநாதி முறையை விரித்துரைக்க முற்பட்டபோது சிவனது திருப்பெயருக்கு முதல் வணக்கம் கூறுகின்றார். நமச்சிவாய வாழ்க என அவனது நாமம் என்றென்றும் வாழட்டும் என்று சொல்லி அதன் பின் அவனது திருத்தாள்களைக் குறிப்பிடுவதன் மூலம் இறைவனது நாமத்திற்கு, ஐந்தெழுத்திற்கு கொடுக்கப்படும் மகிமையை நாம் உணரலாம்.

அப்பர் சுவாமிகளை நீற்றறையில் இட்ட போது அவர் சிவனது திருவடி இன்பத்தை மாசில் வீணையும் எனத் தொடங்கும் திருப்பாடலால் பாடினார். (கலசம் முதலாம் இதழ் – பக்கம் ௯) இப் பதிகத்தின் இரண்டாம் பாடலில் ஐந்தெழுத்தின் மகிமையை பின்வருமாறு கூறுகின்றார்:

**நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நாதவின் றேத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே**

மற்றெரு இடத்தில்

**நமச்சி வாயவென் பாருள ரேலவர்**
**தமச்ச நீங்கத் தவநெறி சார்தலால்**
**அமைத்துக் கொண்டதோர் வாழ்க்கைய னாகிலும்**
**இமைத்து நிற்பது சால அரியதே.**

இத்தகு திருவைந்தெழுத்தின் மகிமையை திருமூலர்

**சிவசிவ என்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்**
**சிவசிவ என்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே.**

குறிப்பு: திருநாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகம் பாடி திருப்பாதிரிப்புலியூர் என்னும் திருத்தலத்திற்கு அருகில் கரைசேர்ந்தார். இவ்விடம் தற்போது " கரையேறவிட்ட குப்பம்" என வழங்கப்படுகிறது.

## திருநீலநக்க நாயனார்

திருசாத்தமங்கையில் அயவந்திநாதர் கோயிலிலுள்ள சிவலிங்கத் திருமேனிமீது ஒரு சிலந்திப்பூச்சி விழுந்தபோது அதைத்தன் வாயால் ஊதி அகற்றினாள் திருநீலநக்க நாயனாரின் மனைவி.

ஆசாரசீலரான நாயனாருக்கு மனைவியின்மீது கோபம் வந்துவிட்டது. இறைவன் திருமேனியில் விழுந்த சிலந்தியை இவள் கையால் அகற்றியிருக்கலாம். எச்சில்படுமாறு வாயால் ஊதுவது எவ்வளவு அபச்சாரம்? என்று எண்ணி மனம் நொந்த திருநீலநக்கர் "ஏன் இப்படிச் செய்தாய்? " என்று கேட்டார்.

"வேண்டும் என்றுதான் அப்படிச் செய்தேன். குழந்தை ஓடி வருகிறது. அம்மா!கண்ணில் தூசி விழுந்து விட்டது என்கிறது. தாய் என்ன செய்கிறாள். ? குழந்தையை அருகில் அழைத்து அதன் முகத்தைத் தன் கைகளில் ஏந்தி கண்களை அகல விரித்து வாயால் 'பூ' என்று ஊதுகிறாள். அதனால் அந்தக் குழந்தையின் கண்களில் விழுந்த தூசி அகல்கிறதோ என்னவோ அதற்கு இதமாக இருக்கிறது. தாயின் அன்பில் என்னமாய் அந்தக் குழந்தை மகிழ்கிறது! அதேபோலத்தான் நானும் செய்தேன். சிலந்தியைக் கையால் அகற்றினால் எம்பெருமான் மேனியில் சிலந்திவிஷம் பட்டு கொப்புளங்கள் தோன்றிவிடும்." என்றாள் நாயனாரின் மனைவி.

இந்தப் பதிலால் சமாதானம் அடையாத நாயனார், "எம்பெருமான் மேனியில் எச்சில்பட ஊதியது தவறு. அதை என்னால் மன்னிக்க முடியாது.அதை வேண்டுமென்றே செய்ததாகவும் நீ கூறுகிறாய். இது மிகப் பெரிய ஆணவம். இத்தனை அபச்சாரம் செய்த உன்னை இனி என் மனைவியாக ஏற்கமாட்டேன். " என்று கூறி விட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றுவிட்டார்.

திருநிலநக்கரின் மனைவி வீடு செல்லாது கோயிலிலேயே படுத்துவிட்டாள். நெடு நேரம் மனைவி வீடு வராததால் திருநீலநக்கர் மீண்டும் கோவிலுக்கு வந்து பார்த்தார். லட்சக்கணக்கான பக்தர்கள் நிறைந்த கூட்டத்தில் மனைவியைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. மனச்சோர்வால் திருநீலநக்கரும் கோவிலிலேயே படுத்து உறங்கிவிட்டார்.


அன்றிரவு சிவபெருமான் இருவர் கனவிலும் தோன்றினார். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தவமிருந்தும் காணமுடியாத சர்வேசுவரனின் திருமேனி இருவருடைய கண்களுக்கும் தோன்றியது.

"ஐயனே இது என்ன கொப்புளங்கள் " என்று வினவ . "அப்பனே சிலந்திப் பூச்சி என் மேனியில் கடித்ததினால் ஏற்பட்ட கொப்புளங்கள். இவை. இதோ பார் ! உன் மனைவி வாயால் எச்சில்பட ஊதிய இடமெல்லாம் கொப்புளங்கள் மறைந்து விட்டன! எச்சில்படாத இடத்தில் கொப்புளங்கள் மறையவில்லை! இப்படித் தன் எச்சிலால் எனக்கு மருந்து போட்டவளைத் தண்டித்துவிட்டாயே" என்றார் எம்பெருமான்.

– சிவாயன் –

# காடே திரிந்தென்ன ? காற்றே புசித்தென்ன?

சில விடயங்களுக்கு நாம் விளக்கம் கண்டாக வேண்டும். தாயின் கருவில் வளர்ந்து உலகுக்கு வந்துவிட்ட எமக்கு, ஏன் வந்தோம் ? என்பது புரியவில்லை. ஒரே மாதிரி உடலுள் புகுந்து வந்திருக்கும் எங்களது ஆன்மாக்கள் விதம் விதமான தொழில்களைப் புரிகின்றன.



ஒருவன் கொலை செய்கிறான் ! ஏனப்பா அவனைக் கொன்றாய் ? என்று கேட்டால் அவன் செய்த தவறுக்குக் கொலைதான் தண்டனை என்கிறான். கொலை செய்வதால் நீயும் தவறு செய்கிறாயே உன்னை யாரப்பா கொல்வது? என்று திருப்பிக் கேட்டால் திருதிருவென்று முழிக்கிறான். அடிப்படையில் கொலைக்கான காரணம் அவனுக்குப் புரிவதேயில்லை. இப்படிக் காரணம் எதுவுமே புரியாமல் காரியங்கள் பலவற்றைச் செய்து வருகிறோம். துன்பத்தை நாமே வலியத் தேடுகிறோம். பின்பு அத்துன்பத்திலிருந்து விடுபடமுடியாமல் ஆண்டவா! ஏனப்பா எம்மை இப்படிக் கொடுமைப்படுத்துகிறாய்? என ஆண்டவனிடம் கேட்கிறோம். இது எப்படிச் சரியாகும்? எம்மைப் படைத்தவன் அவன். அவன் எப்படி எம்மைக் கொடுமைப்படுத்த முடியும்? உதாரணத்துக்கு இப்படிச் சிந்தித்துப் பாருங்கள். ஒரு வீட்டிலுள்ள பிள்ளை தவறு செய்கின்றது. தாய் அவனைத் தண்டிக்கிறாள். அப்படி அவள் தண்டிக்காவிட்டால் அவன் அதனால் பாதிக்கப்படல்மல்லவா? ஆகவே அந்தத் தண்டனை அவசியம் தானே. ! இப்படித்தான் எமக்கு வரும் துன்பங்கள் எல்லாம் ஆண்டவன் எம்மை எங்கோ எதிலோ இருந்து காப்பாற்றத்தான் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

உலக வாழ்க்கையைப் படைத்தவனும் ஆண்டவன்தான். இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவனால் படைக்கப்பட்ட உலக வாழ்க்கையில் உழன்று அவனை மறந்து விடலாமோ? அவனே உண்மை. அவனே சத்தியம். அவனே சகலதும். இதை மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ள வேண்டும்.

உலக வாழ்க்கையில் முற்பிறப்பின் வாழ்முறைகளுக்கேற்ப இப்பிறப்பில் ஆண்டவன் சில கடமைகளை உங்களுக்குத் தருகிறானேயொழிய தண்டனையை அல்ல, என்பதை மனதில் கொள்ளுங்கள். கடமைகளை நீங்கள் செய்து கொண்டிருக்கும் அதே வேளையில் மனதை ஆண்டவனிடம் விட்டுவிடுங்கள். இதற்கு பகவான் ராமகிருஷ்ண பரஹம்சர் அழகான ஒரு உதாரணம் சொல்வார்.

ஒரு வீட்டில் வேலைக்காரி வேலை செய்கிறாள். வீட்டைச் சுத்தமாக்குவது, வீட்டுக்காரரின் பிள்ளையைப் பார்ப்பது ஆகியவே அவளின் வேலைகள். வீட்டுக்காரரின் பிள்ளையைத் தன் பிள்ளைபோல் பாவித்துச் சீராட்டுகிறாள். எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கும், இவள் மனம் மட்டும் வீட்டில் இருக்கும் தன் பிள்ளையிடமே இருக்கிறது. இதே போன்றுதான் மனிதவாழ்க்கையும் அமைந்து இருக்க வேண்டும். உங்களுக்கு அளிக்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே செய்வதோடு மனதை ஆண்டவனிடம் லயிக்க விடுங்கள். குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு இப்படி இருக்க முடியுமா ? என்று நீங்கள் எண்ணலாம்.

## நல்லியல்பு வள்ளலார்

இருக்கலாம்! நிச்சயமாக இருக்கலாம்! இதைப் பட்டினத்தார் வெகு அழகாகச் சொல்கிறார்.

**காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி**
**ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதவர் ஓங்கு விண்ணோர்**
**நாடே இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர் பால்**
**வீடே யிருப்பினும் மெஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே**

நாரியர் பால் வீடேயிருப்பினும் மெஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே என்று எவ்வளவு அழகாகக் கூறுகிறார். காட்டுக்குச் சென்று காற்றும் புசிக்கவேண்டாம். கந்தைத் துணியணிந்து பிச்சையும் எடுக்கவேண்டாம்

உள்ளன்போடு உங்கள் ஓய்வு நேரத்தில் ஆண்டவனோடு ஐக்கியமாகுங்கள். இன்றைய உலகத்தில் இதுதான் தவம்.

ஒரு குடும்பத் தலைவனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுக்குச் சில கடமைகளை ஆண்டவன் கொடுக்கிறான். அவனுடைய மனைவியையும் பிள்ளைகளையும் கவனிக்கும் பொறுப்பு . இந்தப் பொறுப்பைச் சரிவரச் செய்யாமல் காவி உடுத்து காட்டுக்கு தவம் செய்யப்போகிறேன் என்று அவன் போனால் எந்த ஒரு கணத்திலும் ஆண்டவனோடு அவன் ஐக்கியமாக முடியாது.

இதனை அப்பர் பெருமான் பின்வருமாறு கூறுகிறார்.

**பெருக லாந்தவம் பேதமை தீரலாம்**
**திருக லாகிய சிந்தை திருத்தலாம்**
**பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்**
**மருக லானடி வாழ்த்தி வணங்கவே**

என்கிறார்.

**"...மேலைத் தவத்தளவே ஆகுமாந் தான் பெற்ற செல்வம்"**

என்று கூறுகிறார் ஔவையார்.

தேவர்களில் சிலர் அரக்கர் வீடுகளில் குற்றேவல் புரிகின்றனர். ஏன்? அரக்கர்கள் செய்த தவத்தின் விளைவு என்று கூறுகிறார்கள். தங்கள் கடமைகளை முடித்து மீதி நேரங்களில் தவம் புரிகின்றனர் . இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், தங்களுடைய அன்றாட கடமைகளினூடாக ஆண்டவனைக் குறித்த தவத்தை அவர்கள் மேற்கொள்வது தான். இப்படி அவர்கள் மேற்கொள்கின்ற தவத்தின் வலிவு ஆண்டவனுக்கு அருகில் இருக்கும் தேவர்களையே அடிமை நிலைக்கு கொண்டு வந்து விடுகின்றது. இதனை கம்பநாடர் பின்வருமாறு கூறுகின்றார்.

**மரம் அடங்கலும் கற்பகம் மனையெலாம் கனகம்**
**அரமடந்தையர் சிலதியர் அரக்கியற்கு அமரர்**
**உடம்படங்கி வந்து இளையராய் உழல்குவர் ,ஒருவர்**
**தரம் அடங்குவது அன்று இது தவம் செய்த தவமால்.**

ஆகவே உலகத்தில் ஆண்டவன் ஒருவனே உண்மை. மற்றவை எல்லாம் பொய்யானவை என்று நினைப்போமாக. எமது ஓய்வு நேரத்தில் பொய்யான இவற்றில் உழலாது மெய்யான ஆண்டவனோடு ஐக்கியமாவோமாக .

இந்து மதம் அழியவுமில்லை. அதில் அர்த்தத்துக்கு குறைவுமில்லை. பல ஆயிரம் ஆண்டுகளாக , பல்வேறு தாக்குதல்களையும் சமாளித்து அது தன்னைக் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் புதிதாக நாம் சக்தி ஏதும் அளித்துக் காப்பாற்றவேண்டிய அவசியமில்லை.

## விபூதி – குங்குமம் மகிமை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அருளியது.

விபூதி என்பது ,பசுமாட்டினுடைய சாணத்திலிருந்து பஸ்மம் ஆக்கப்பட்டு சுத்தவெளுப்பாக இருப்பது . இந்த விபூதியை உடலில் தரித்துக் கொள்வதால் , தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் எல்லாம் அகன்றுவிடும். அதோடு கூட அந்த விபூதியினுடைய சத்து உடலிலுள்ள ரோமங்களின் வழியாக உள்ளுக்குள் இறங்கி வியாதிகளுக்கே ஆதாரமாய் உள்ள கிருமிகளை அழித்துவிடுகின்றது. சிறிது விபூதியை உட்கொள்ளுவதால் எல்லாவிதமான பாவங்களும் தோஷங்களும் போய்விடுகின்றது. நெற்றியில் சிறிது இட்டுக் கொள்வதால் லட்சுமி கடாட்சம் ஏற்படுகின்றது. அதாவது வாழ்க்கை நன்றாக சுகமாக,அமைவதற்குப் பொருளாதாரம் கிடைக்கின்றது.

குங்குமம் உலகிற்கெல்லாம் தாயாக விளங்கும் பார்வதியினுடைய உருவத்தை நினைவூட்டுகின்றது. குங்குமம் சௌமாங்கல்யத்தை, அதாவது தீர்க்காயுளைக் கொடுக்க வல்லது. எந்த இடத்தில் யாருடைய நெற்றியில் குங்குமம் பிரகாசிக்கின்றதோ , அங்கு தரித்திரம் இருக்காது.

உலகு எல்லாவற்றிற்கும் பார்வதி–பரமேஸ்வரன் ,லட்சுமி–நாராயணன் ஆகியோருடைய பிரசாதங்களாக விபூதி, குங்குமம், சந்தனம், முதலியவைகள் இருக்கின்றன .

ஆகவே எல்லா அன்பர்களும் வியாதிகள் நீங்க ,மனக்கவலை நீங்க, தரித்திரம் நீங்க, சுபீட்சம் ஏற்பட விபூதி ,குங்குமம் தரித்து எல்லா நன்மைகளும் அடைவார்களாக !

திருசபையும் ,கனகசபையும் ஒன்றாக இணைந்த சிதம்பரத் திருத்தலம் தத்துவ ரீதியானது. பொன்னம்பலத்தின் ஒன்பது தங்கக் கலசங்கள்–ஒன்பது சக்திகள்,64 கைம்மரங்கள், அறுபத்து நான்கு கலைகளைக் குறிப்பவை. அதில் வேயப்பட்டிருக்கும் 21600 ஓடுகள் மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசத்தின் எண்ணிக்கையாம்.

அங்கே பொருத்தப்பட்டுள்ள 72000 ஆணிகள் – மனிதனுடைய சுவாச சஞ்சாரத்திற்கு ஆதாரமான நாடிகளின் எண்ணிக்கையாம்.

மனிதனின் இதயம் உடலின் நடுவே இல்லாது இடப்புறம் தள்ளியிருக்கிறது. அது போலவே சிதம்பர ஆலயத்தின் மத்தியில் இல்லாமல் சற்று தள்ளி அமைந்துள்ளது.

கனகசபையில் உள்ள பதினெட்டு தூண்களும் பதினெண் புராணங்களை உணர்த்துகின்றன. அதற்குச் செல்லும் ஐந்து வெள்ளிப்படிகளும் பஞ்சாட்சரத்தை உணர்த்துகின்றன.

# சித்தாந்தச் சிந்தனை

அமரானந்



## திருவருட்பயனில் இறைவனது இயல்பு

உமாபதி சிவாச்சாரியார் இறைவனது மேலான இயல்பினைத் தன்னுடைய திருவருட்பயன் நூலில் முதலாம் அதிகாரத்தில் பத்துக் குறட்பாடல்களில் எடுத்து விளக்குகிறார். இவ்வதிகாரம் பதிமுது நிலை எனப்படுகின்றது. சிவபெருமானைக் காக்கும் தலைவனாகக் கொண்டு அவனது சிறப்பியல்பினைக் காட்டும் அதிகாரம் பதிமுது நிலை. இவ்வதிகாரத்தினின்று ஐந்தாம், ஆறாம் குறள்கள் இங்கு சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சிவபெருமான் உயிர்கள் மேல் கொண்டுள்ள அன்பின் காரணமாக படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் கருணையே உருவமாகி நின்று செய்கின்றார். இந்த அருட் செயல்களைச் செய்யும் போது சிவபெருமான் தனது சக்தியாகிய உமை அம்மையுடன் பிரிவில்லாமல் நின்று ஒன்பது வகைத் திருமேனிகளைக் கொள்கின்றார். இந்நிலை நவந்தரு பேதம் எனப்படும்.

**சிவம், சக்தி, நாதம், விந்து** என்னும் நான்கு அருவத் திருமேனிகளும், அதாவது உருவமற்ற நிலை ;

**மகேஸ்வரன், உருத்திரன், திருமால், பிரம்மா** ஆகிய நான்கு உருவத்திருமேனிகளையும்

சதாசிவம் என்கின்ற உருவம் உள்ளதும் அல்லதுமான அருவுருவத் திருமேனி ஒன்றினையும், சிவலிங்க வடிவத்தையும் கொண்டுள்ளார். இதனை உமாபதி சிவாச்சாரியார்

**அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவும் உடையான் உளன். (5)**

என்று சொல்லியுள்ளார். இக்குறளில் அருவும், உருவும் என்னும் பதங்கள் தனித்தனியாகவும், அருவும்–உருவும் என அருவுருவத்தைச் சொல்லும் பதமாகவும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

அருவும்–உருவமில்லாத சிவம், சக்தி, நாதம், விந்து என்கின்ற நான்குமாகும்.
உருவும்–மகேஸ்வரன, உருத்திரன், திருமால், பிரம்மா ஆகிய உருவத் திருமேனிகள் .
அருவும் உருவும்– சதாசிவம் என்னும் அருவுருவத்திருமேனி.
அறிஞர்க்கு– ஞான வழியில் நின்று தன்னைத் தொழுபவர்க்கு.
அறிவாம் உருவும் –ஞான வடிவாகிய அறிவாகிய ஒரு திருமேனி.
உடையான் –உடையவராக.
உளன் – இருக்கிறார் எங்களது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான்.

இதன் மூலம் நாம் பரமசிவனாக இருக்கும் பதியாகிய தலைவன் உயிர்களை உய்விக்கும் பொருட்டும் உயிர்களின் பலவேறுபட்ட தன்மைகளுக்கு அமைய அவரவர் வழிபட ஏதுவாக தன்னைத் தருகின்றான் என உணரலாம். இவ்வாறு தன் நிலையை உயிர்கள் பெற சிவபெருமான் பல வகைத்திருமேனிகளை எடுக்கின்றான்.
சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்கின்ற நான்கு மார்க்கங்களுக்கூடாக ஆன்மாவானது தன்னைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி இறைவனை ஞானவடிவில் காண இத்திருமேனிகளை சிவபெருமான் கொள்கின்றார்.
இவ்வாறு திருமேனிகளைத் தோற்றுவிக்க சிவபெருமானுக்கு வேறு ஒருவருடைய அருள் தேவையா என எழக்கூடிய கேள்விக்கு உமாபதி சிவாச்சாரியார் தமது அடுத்த குறளில் பதில் தருகிறார்.

**பல்லா ருயிர் உணரும் பான்மையென மேல் ஒருவன்**
**இல்லாதான் எங்கள் இறை (6)**

பல் ஆர் உயிர்– பலவகையாக, எண்ணற்றனவாய் எங்கும் நிறைந்துள்ள எல்லா ஆன்மாக்களுக்கும்.
உணரும்– அறிகின்ற அதாவது இறைவனால் படைக்கப்பட்ட உடம்பு, உலகம், கருவி முதலியவற்றைக் கொண்டு உயிர் உணரும்.
பான்மையென– தன்மையைப் போல .
மேலொருவன் இல்லாதான்– தனக்கு மேலாக வேறொரு தலைவன் இல்லாதான்.
எங்கள் இறை– எங்களுடைய தலைவனாகிய சிவபெருமான் .

ஐந்தாவது திருவருட் பயனில் சொன்ன திருமேனிகளை எம்பெருமானுக்கு வேறொருவர் கொடுக்கவில்லை. சிவபெருமான் அத்திருமேனிகளை தமக்குத் தாமாக உருவாக்கிக் கொள்கிறார் என்பதை ஆறாவது குறள் கூறுகின்றது.
எமக்கு இறைவன் உடல், உலகம், கருவி அனுபவிக்கும் பொருட்களை எமது பாவ புண்ணியத்திற்கு ஏற்ப தருவது போல, இறைவனுக்குரிய ஒன்பது திருமேனிகளையும் அவனைவிட மேலான ஒருவன் அவனுக்கு அளிக்கின்றானோ எனக் கருத வேண்டாம். சிவபெருமான் தன்னைவிட தனக்கு மேல் ஒருவன் இல்லாத இறைவன் என்பதை விளக்கும் பொருட்டே. "மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை" எனத் திட்டவட்டமாகச் சொன்னார் உமாபதி சிவாச்சாரியார்.

உயிர்கள் கொள்வது ஊனுடம்பு . இறைவன் கொள்ளும் திருமேனி அருளுடம்பு.

1. தன்வயத்தனாதல் – சுவசந்தரர்
2. தூய உடம்பினனாதல்– விசுநித தேகத்தினர்
3. இயற்கை உணர்வினனாதல்– அநாதிபோதம்
4. முற்றும் உணர்தல்–சருவஞ்ஞர்
5. இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்–நின்மலர்
6. பேரருளுடைமை– அருளாளர்
7. முடிவிலாற்றலுடைமை–அநந்தசக்தி
8. வரம்பிலின்பமுடைமை–திருப்தி

சிவபெருமானது இவ் எண் குணங்களும் அவனுக்கு மேலொருவன் இல்லாத தன்மையைத் தெளிவாக்குகின்றது.

ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் இதன் பிரகாசமும் மறைந்து போகும். அது போல மனதில் அகங்காரம் இருக்கும் வரையில் அதில் ஈஸ்வர ஜோதி பிரகாசிக்காது.
அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும், முக்தியும் கைகூடாது. பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும்; நீங்கா.
ஆத்ம சாதன அபிவிருத்திக்கு அவசியமானவைகளுள் சத்சங்கம் (நல்லாரிணக்கம் ) ஒன்றாகும்.
இரவில் வானில் பல விண் மீன்களைக் காண்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே ! உனது அஞ்ஞான காலத்தில் நீ இறைவனைக் கான முடியாததினால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே.
பெறுதற்கரிய இந்த மானிடப்பிறவியை பெற்றவன் இப்பிறவியிலேயே இறைவனை அறிய முயலாது போனால் அவன் வீணில் பிறந்தவனே ஆவான்.
–பகவான் ராமகிருஷ்ணர்–

# குறளோசை

ஆதியந்தம் இல்லா அருட்பெரும் சோதியானவன் சிவபெருமான். அப்பேர்ப்பட்ட சிவனார்க்கு ஈடு இணை எதுவுமில்லை. உவமை சொல்லத்தான் உலகில் ஏதும் உண்டோ. தனக்கு மேல் எதுவுமில்லை. யாவற்றிற்கும் காரணம் அவனே என்ற உண்மையை நாம் வள்ளுவர் திருவாயில் மலர்வதைக் காண்போம்.

**"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது"**

இதன் பொருள் யாதெனின், தனக்கு உவமையாக மற்றொன்று இல்லாத இறைவனின் திருவடிகளை துணையாகச் சேர்ந்தவர்க்கு அல்லாமல் பிறருக்கு மனக்கவலையை மாற்றல் இயலாது.



வள்ளுவரின் இக்கருத்தை நாம் மனுநீதிச் சோழன் வாழ்வியலில் இடம்பெற்ற சம்பவத்தின் வாயிலாகப் பார்ப்போம். சோழவள நாட்டின் பழமை மிக்க நகரம் திருவாரூர். சூரிய வம்சத்தில் அநபாய சோழனின் முதல்வனான மனுநீதிச் சோழன் அரசாண்டு வந்தான். அவன் தன் மண்ணில் வாழும் உயிர்களை எல்லாம் தன் இரு கண்களைப் போலவும் தன் உயிர்போலவும் பாதுகாத்து வந்தான். அளவில்லாத நல்லறங்களை ஆற்றி இணையற்றவனாகத் திகழ்ந்தான். அவன் தன் ஆட்சியில் மனுநூலின் படி நீதிபரிபாலனம் செய்து மனுநீதிச் சோழன் என்ற பட்டப்பெயரைச் சூடிக்கொண்டான். திருவாரூரில் கோயில் கொண்ட வன்மீகநாதரான சிவபெருமானிடம் அளவிலா பக்தி கொண்டவன்.

மன்னவனுக்கு சிங்கக்குட்டி போன்ற ஓர் அரசிளங்குமரன் மகனாகப் பிறந்தான். அவனது பெயர் வீதிவிடங்கன். அவன் நன்நெறியில் நின்று பல கலைகளையும், கற்று தேர்ச்சி பெற்றான். தந்தை மகிழும்படி நற்குணதயாளனாக வளர்ந்து வந்தான். தந்தையின் அளவற்ற பாசத்திற்கும் பாத்திரமானான். இவ்வாறு வீதிவிடங்கன் வளர்ந்துவரும் நாளில் ஒரு தடவை உலாச்சென்று கொண்டிருந்தான். அப்போது மன்னவன் நீதியையும் மனோதிடத்தையும் மாபெரும் தர்மத்தையும் சோதிக்க வந்தது போல் அழகான இளம் பசுக்கன்று ஒன்று எவரும் காணாதபடி தெருவினூடே துள்ளி ஓடி வந்து வீதிவிடங்கன் தேர்ச்சக்கரத்தில் எதிர்பாராதவிதமாக விழுந்து உயிர் துறந்தது. அதனைக் கண்ட தாய்ப்பசு கதறி ஓடி வந்து துடிதுடித்தது. மண்ணிற் புரண்டது. அதனைக் கண்ட வீதிவிடங்கன் "இங்கே அபாயம் நேர்ந்தது" என்று சொல்லித் தடுமாறினான். துன்பத்தில் அழுந்தினான் . மலர்தலை உலகம் காக்கும் மனுநீதிச் சோழனும் மாபெரும் மன்னவராகிய என் தந்தைக்கு இந்தப் பெரும் பழியைச் சுமத்தவோ நான் பிள்ளையாகப் பிறந்தேன் என்று பரிதவித்தான். தாய்ப்பசுவோ கண்ணீர் வழியக் கதறிக்கொண்டு தன்னுயிரைப்போல மன்னுயிர் காக்கும் மன்னவன் அரண்மனையை அடைந்தது. அங்கே கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை தன் கொம்பினால் ஆட்டி அடித்து, தன் குறையைத் தெரிவித்தது. இதுவரை யாரும் இந்த மணியை அடித்ததில்லை. பாவத்தின் பேரோலியோ இதுவென அரசன் அரியாசனத்தை விட்டு குதித்து வாயிலை அடைந்தான். அங்கு நின்ற காவலன் அரசனைப் பணிந்து இந்தப் பசு எங்கிருந்தோ வந்து தன் கொம்பினால் மணியை அடித்தது என்றான்.

**உமா ஜெயக்குமார்**

பசுவைக் கண்ட மனுநீதிச் சோழன் வருந்தினான். இதற்கு நேர்ந்த குற்றம் யாதென அமைச்சர்களை இகழ்ச்சியாக நோக்கினான். கல்வி கேள்விகளில் முதியோரும் முன்பு நடந்ததை அறிந்தவருமான அமைச்சர் ஒருவர் முன் வந்து வணங்கி "மன்னவரே! தங்கள் தவப்புதல்வன் உலா வந்த தேர்க்காலில் இப்பசுவின் கன்று வந்து அகப்பட்டு இறந்தது. அதனால் வருந்திய தாய்ப்பசு இம்மணியை அடித்திருக்கின்றது" என்றார். மன்னவன் மனுநூலின் உண்மையை அறிந்தவனாதலால் தாய்ப்பசு படும் வேதனையை தானும் அனுபவிப்பதே தருமம் எனக் கருதினான். அமைச்சர்களும் அரசன் முடிவை அறிந்து பேசமுடியாமல் விலகினர். மனுநீதிச் சோழன், அமைச்சர் ஒருவரை நோக்கி என் மகனை அழைத்து வந்து பசுவின் கன்று இறந்த அதே வீதியில் கிடத்தி தேரை வேகமாகச் செலுத்த ஆணையிட்டான். செய்ய மனமில்லாத அமைச்சர் அவ்விடத்தைவிட்டகன்று தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். அதனைக் கண்ட மன்னர் தானே மகனை அழைத்துக் கொண்டு சென்று கன்று இறந்த வீதியில்க்கிடத்தி தேரை வேகமாக செலுத்தினான். பூவுலகத்தவர் கண்ணீர் சொரிந்தனர். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். மன்னவன் எதிரே வீதிவிடங்கப்பெருமானாகிய வன்மீகநாதர் இடபவாகனத்தில் தேவர்கள் வணங்க காட்சி கொடுத்தார். தலைச்சடையில் இளம்பிறை அணிந்து அருள்மயமான நெற்றிக் கண்ணொளிவீச, உமாதேவியாரொடு எழுந்தருள மன்னன் கரம் கூப்பி வணங்கினான். அவன் மனக்கவலையை மாற்ற பசுக்கன்று மீண்டும் உயிர் பெற்று எழுந்தது. வீதிவிடங்கனும் அமைச்சரும் ஒருங்கே உயிர் பெற்று எழுந்தனர். வீதிவிடங்கன் மன்னவனை விழுந்து வணங்கினான். தாய்ப்பசுவும் மன்னனும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டனர். செங்கோல் ஓச்சும் மனுநீதிச் சோழனுக்கு திருவீதியில் திருவருள் கொடுத்த வன்மீக நாதரான பெருமானின் கருணையும் அடியார்க்கு எளியவனாக வரும் பெருமையையும் வள்ளுவனின் ஈரடிக் குறட்பாவில் 'கண்டோம். அவ்வாறே நாமும் எம்பெருமானின் பாதார விந்தங்களைப் பற்றி எம்மனக்கவலைகளை மாற்ற வழிகாண்போம்.

# சித்ராபௌர்ணமி

சித்திரை நட்சத்திரம் பௌர்ணமியுடன் கூடிய தினத்தில் நடைபெற்ற அற்புதத்தால் சித்ரா பௌர்ணமி இன்றும் சிறப்பான ஒரு நாளாக விரதமிருந்து இந்துக்களால் கொண்டாடப்படுகின்றது.

**பெயர் வரக்காரணம்**

தவம் புரிந்து கொண்டிருந்த பிரம்மாவின் உடலில் இருந்து சித்ரா பௌர்ணமியில் தோன்றினார் சித்திரகுப்தன். எமதர்ம ராஜனின் சபையில் இருந்து சகல ஜீவராசிகளின் பாவ புண்ணியங்களை விபரமாக எடுத்துக் கூறும்படி பிரம்மா சித்ரகுப்தனை வேண்டினார்.

சித்திர குப்தன் என்றால் சித்திரங்களின் – சேர்க்கை அல்லது சேகரிப்பவர் என பொருள்படும். அதாவது எமதர்மனின் பிரதம கணக்குப்பிள்ளை. உலகில் எல்லாரினதும் பாவ புண்ணிய சித்திரங்களை சேகரித்து ஒப்பிப்பவர் எனலாம். மரண காலத்தில் இவர் கொடுக்கும் அறிக்கையின்படியே எமதர்மன் தண்டனை அளிப்பார். அதன்படி பிறகு பிரம்மா அவரவர் தலையில் எழுதுவார். இதையே தலை எழுத்து என்றும் அடுத்த பிறவிக்கான புதுக்கணக்கு என்றும் கொள்கிறோம்.

ரவீ நடராசா

எல்லா ஜீவாத்மாக்களினது சம்பவங்களும் பரமாத்மாவின் தொடர்பிற்காக பிரபஞ்ச ஏட்டில் கணக்கு வைக்கப்படுகின்றது. பிறப்பும் , இறப்பும் தொடர்புபட்டது. பிரம்மனுக்கும், இயமனுக்கும் இக்கணக்குகளைக் காண்பித்து படைத்தல், அழித்தல் தொழில்களை சிறப்புடன் நடைபெற உதவுபவர்.

சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் கூடிவருகின்ற , நாள் வியாழக்கிழமை ஆகவோ சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை ஆகவோ இருப்பின் முக்கியத்துவமானதாகவும் விசேடமானதாகவும் கருதப்படுகின்றது.

**வரலாறு**

பிரகஸ்பதி கடவுள்களுக்கெல்லாம் ஆலோசகர். இந்திரன் தேவலோகத்திற்கு மன்னன். இந்திரன் பிரகஸ்பதிக்கு தக்க மரியாதை கொடுக்காததினால் பிரகஸ்பதி கோபம் கொண்டார். பிரகஸ்பதியின் ஆலோசனை கிட்டாத இந்திரன் தனது நடவடிக்கைகளில் பாபமிழைக்கலானான் . சொற்ப காலத்தின் பின்னர் பிரகஸ்பதி இந்திரனை மன்னித்து பிராயச்சித்தமாக என்னென்ன மதத் தலங்களைத் தரிசித்தால் பாவம் நீங்குமென எடுத்துரைத்தார். அதற்கு ஏற்ப இந்திரனும் தலங்களைத் தரிசித்து வரலானார். மதுரைக் கானகப்பகுதியில் ஓர் இடத்தை அடைந்ததும் தன் பாவங்கள் யாவும் நீங்கி தனது உடல் மன நிலைகளில் பெரும் மாற்றத்தை உணர்ந்தான். அதற்கான காரணத்தை அறிய சுற்றிலும் ஆராய்ந்த போது ஒரு குளத்தருகே சிவலிங்கமொன்று ஜொலிப்பதைக் கண்டான். சிவலிங்கத்தின் மகிமையே தனது மாற்றம் என அறிந்து தனது கட்டிடக் கலை வல்லுனரான விஸ்வகர்மாவை அழைத்து வந்து அங்கேயே லிங்கத்திற்கு ஓர் ஆலையத்தைக் கட்டுவித்தான். அதனருகிலேயே சிவனின் ஈஸ்வரிக்கும் ஆலயமமைத்தான்.

இந்திரனும் அவ்விடத்தே பூசைக்கு மலர்களில்லாது தவித்துக் கொண்டு ஈஸ்வரனையும் ஈஸ்வரியையும் பிரார்த்திக்கவே அதிசயமாக குளத்திலேயே அல்லி மலர்கள் பூத்தன. இந்திரன் இவ்வாறு பிரார்த்தித்த நாளே சித்ரா பௌர்ணமியாகும். இன்றும் மதுரையிலே இந்நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

**நதி வரலாறு**

சித்ரா நதியானது குற்றாலத்தில் அதாவது திருநெல்வேலி மாவட்டத்தில் இந்நன்நாளிலேயே ஜனித்தது. அதில் நீராடுவது புண்ணியமென்று இன்றும் நம்பிக்கையோடு பக்தர்கள் பலரும் நீராடுவது வழக்கமாகும்.

**கல்வெட்டுகளில்**

சித்ரா பௌர்ணமிப் பண்டிகையின்போது இராவணர்களுக்கும் பக்தர்களுக்கும் உணவளிப்பதற்காக நெல்வயல்களை தானம் கொடுத்த வரலாற்றை . திருச்சினாப்பள்ளி, சோழ மன்னன் ராஜகேசரி மன்னன் கல்வெட்டுக்களில் காணலாம்.

இதே மன்னன் 550 சிவயோகிகளுக்கு சித்திரை விழாவுக்கு நிலத்தைக் காணிக்கையாக்கிய வரலாறு நெடுங்கால நாத சுவாமிகோவிலின் பிள்ளையார் பிரகாரத்தின் மேற்குச் சுவரில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு சித்ராபௌர்ணமி வெகுவிமரிசையாக பக்தி சிரத்தையோடு பல கோவில்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**சித்ரா பௌர்ணமி விரதம்**

சித்ர குப்தனை வேண்டிக்கொண்டு பெரும்பாலும் பெண்களே விரதம் மேற்கொள்கின்றனர் . சித்ரா பௌர்ணமியில் சித்திரகுப்தனைப் போல் மாக்கோலம் போட்டு ஏடும் எழுத்தாணியும் வைத்து விளக்கேற்றி பூசை செய்ய வேண்டும். பசும்பால் , மோர் சேர்க்காமலும் உப்பு இல்லாமலும் பகலில் மட்டும் உணவு உட்கொண்டு . இரவில் சித்திரபுத்திர நாயனார் கதை என்னும் தமிழ்ப்பாட்டாகவுள்ள சரிதத்தைப் படிப்பார்கள்.

நரகத்திற்குப் போகாமலும் பாவங்களிலிருந்து காக்கவுமே இந்த விரதமாகும். இது ஒரு பிராயச்சித்தமாகும். எமபயமில்லை என்று கூறுவார்கள்.

**சித்ரகுப்தனின் கோவில்கள்.**

காஞ்சிபுரத்தில் சித்ரபுத்திரனுக்குத் தனியாக ஒருகோவில் இருக்கின்றது. சித்ராபௌர்ணமியில் பூசையும் புறப்பாடும் உற்சவமும் நடைபெறுகின்றது. திருவண்ணாமலையில் ஒரு சந்நிதி உண்டு. சித்திரன் பெருமையை உணர்ந்து சந்தியா வந்தனத்தில் இவருடைய பெயரைச் சேர்த்திருக்கின்றனர்.

# சைவத்திருக்கோயில்களில் இசையும் நடனமும்.

திருமதி அன்னபூரணி சத்தியமூர்த்தி
(ஆசிரியை, ஸ்ரீ மீனாட்சி நடனப்பள்ளி)

பல்லாண்டு காலமாகக் கலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வருகின்றன. வேதாகம முறைப்படி கோயில்கள் தொடங்கின. எனவே கோயில்கள் சமய உணர்வினைப் புகட்டும் நிலையமாக மட்டுமன்றிக் கவின்கலை மையங்களாகவும் மிளிரலாயின. கோவில் அமைப்பு அதில் இடம்பெறும் சிற்பங்கள், ஓவியங்கள், கிரிகைகள், முதலியவற்றிலே இசையும், நடனமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

சைவசமயத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமான் ஆடற்கரசனாக நடராஜனாக விளங்குகின்றான். நடராஜனின் வடிவமே இதற்கு எடுத்துக் காட்டு. சிலப்பதிகாரத்திலே மாதவி கற்றதாகக் கூறும் பதினொருவகை ஆடல்களும் வெவ்வேறு கடவுளர் ஆடியவையே. எனவே தெய்வங்களுக்குரிய கோவில்களும் கலைக்களஞ்சியமாக விளங்கியதில் வியப்பில்லை. இத்தகைய ஆடல்வல்லான் கோவில்களிலே சிற்பங்களும், ஓவியங்களும் இடம்பெறலாயின. நர்த்தன கணபதி, வீணாதர தட்சணாமூர்த்தி வீணையினை ஏந்தி வாசிக்கும் சரஸ்வதி, சிவபெருமானின் 108 கரணங்கள், கண்ணனின் வேய்ங்குழல் பற்றிய சிற்பங்களைக் குறிப்பிடலாம். கோவில் அமைப்பிலேயும் நிருத்தமண்டபம் என்ற ஒரு பகுதி நடனத்திற்காக ஒதுக்கப்பட்டு இருந்தது.

மலரினாலும், இலையினாலும், மனதினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும் , நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது.


"ஏழிசையயாய் இசைப்பயனாய் ஆரியம் தமிழோடிசையான வனாக இயங்கும் இறைவனை, ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகப் பாடுகின்றிலை எனவும் , ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே என சைவ நாயன்மார்களும் பாடோமே எந்தை பெருமானைப் பாடி நின்றாடோமேயாயிரம் பேரானை என வைணவ ஆழ்வார்களும் ஆடல்பாடல் மூலம் ஆண்டவனை வழிபட்டு உய்யும் முறையினை நன்கு விளக்கியுள்ளனர்.

நால்வேதங்களின் சாரமாக பொதுமக்களின் ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதம் , நாட்டிய சாஸ்திரம் இருக்கின்றது. சங்கீத ரத்னாகரம் போன்ற நூல்களும் இசை, நடனம் ஆகியனவற்றின் சிறப்புகளைத் தெய்வீக அடிப்படையில் வலியுறுத்திக் கூறுவன. "சங்கீத சாஸ்திர ஞானமுசாருப்ய சௌக்கியதமே மனஸா" என கர்நாடக சங்கீதத்தை நன்கு மேம்படுத்தியுள்ளமை குறிப்பிடற்பாலது.

கோவில்களில் இடம் பெற்ற கிரிகைகளில் ஆடலும் பாடலும் நன்கு இடம்பெற்றன. சைவத்திருமுறைகள் பண்ணுடன் ஓதப்பட்டு வந்தன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், ஆகிய ஐந்தும் பஞ்சபுராணங்கள் என அழைக்கப்பட்டன. கோயில்களில் இடம்பெறும் நவசக்திக் கிரிகைகள் குறிப்பிடற்பாலன. அவை பிரம்மசந்தி, இந்திரசந்தி, யமசந்தி, நிருதிசந்தி, வருணசந்தி, வாயுசந்தி, குபேரசந்தி, ஆசானசந்தி, ஆகிய நவசந்திகளிலும் அவ்வச்சந்திகளுக்குரிய தெய்வங்களைக் குறித்துக் கொடியேற்ற, கொடியிறக்க திருவிழாவின்போது அவரவர்களுக்குரிய தாளம் , இராகம், பண், நிருத்தம், வாத்தியம், நன்கு அமையவேண்டும் என, ஆகமங்களும் அவற்றின் வழிநூல்களும் எடுத்தியம்புகின்றன. முற்காலத்திலே கோயில்களிலே இசை, நடன, நிகழ்ச்சிகளை அளிப்பதற்காக இசைக்கலைஞர், வாத்தியக்கலைஞர் , நாட்டியக்கலைஞர் (தேவரடியார்) என்போர் கோயில்களின் வருமானம் தேவைகளுக்கேற்ப நியமிக்கப்பட்டிருந்தனர் என்பதை, சாசனங்கள் வாயிலாக அறிகின்றோம். குறிப்பாக பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர், ஆட்சிக்காலங்களில் இத்தகைய ஒழுங்கு நிலவியதை அறியலாம்.

ஆனால் இந்த ஒழுங்கு முறை இன்று அனுசரிக்கப்படுவதில்லை. குறிப்பாக நடனம், "நிர்த்தயம் சமர்ப்பியாமி" என்று சொல்லில் மட்டும் இடம்பெறுகின்றது. தேவாரமும் தக்க பண்மூலம் இடம்பெறுகின்றனவா என்பது சந்தேகத்துக்குரிய இடமே.

இந் நிலைக்குக் காரணம் எதுவென்று கண்டு அதை நாம் நிவர்த்தி செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் மிகப் பெரிய கலாச்சாரச் சீரழிவை நாம் எதிர் கொண்டாகவேண்டிய கட்டாயம் உருவாகிவிடும்.



# நடந்து வந்த பாதையில்........

**1993** ம் ஆண்டின் தொடக்கம், ஆறாவது நாள் என்று நினைக்கிறேன். வைகறைப் பொழுதில் இலண்டன் ஸ்ரீ முருகன் கோயிலில் வணங்கிக் கொண்டிருக்கிறேன். சிவாசாரியாரின் வேத பராயண ஒலி மது உண்ட வண்டின் ரீங்காரம் போலக் காதில் நுழைந்து மகிழ்ச்சி கலந்த ஒரு தெய்வீக உணர்வை ஏற்படுத்துகிறது. சொந்த ஊரில் உள்ள ஒரு கோயிலில் வழிபடுவது போன்ற ஒரு பிரமை. ஒரு அமைதி.

வழிபாடு முடிந்து பிரசாதம் வழங்கப்படும் போதுதான் இலண்டனில் இருக்கிறோம் என்ற உணர்வு வருகிறது. மனசு 23 ஆண்டுகள் பின்னோக்கி ஓட எத்தனிக்கிறது.

1970 பெப்ரவரி மாதம், இலண்டன் வந்திறங்கி நாட்கள் சிலவே நகர்ந்திருந்தன. நண்பர் ஒருவர் விம்பிள்டனிலே சிவராத்திரி

**ஞாலக்கோ**

நடைபெறுகிறது என்று தெரிவிக்கிறார். வழிபாட்டிலே பங்கு கொள்ளும் ஆவல் ஒரு புறம், இலண்டனிலே எப்படி வழிபடுகிறார்கள் என்பதைப் பார்க்கும் ஆர்வம் ஒருபுறம் உந்த, ஊசி துளைப்பது போல, உணர்வை உறைபனி உடம்பெல்லாம் உணர்த்த விம்பிள்டனை அடைந்தேன். அங்கு ஒரு இல்லத்தில் வழிபாடு இடம் பெற்றது. அப்போது இலண்டனில் இருந்தவர்கள் மிகச் சிலரே. அதிலும் சமய ஈடுபாடு உள்ளவர்கள் என்றால் பதினைந்து இருபது குடும்பங்கள் என்றே சொல்லலாம்.

இவர்கள் அதற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் சமய அமைப்பை ஏற்படுத்தி மாதந்தோறும் ஒரு மண்டபத்தில் வழிபாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகிறார்கள் என்று அறிந்தேன். பிரித்தானியா சைவக் கோயில் அறக்கட்டளை என்ற பெயரில் அந்த நிறுவனம் திரு. சபாபதிப்பிள்ளையைத் தலைவராகக் கொண்டு இயங்கியது. அவர்களுக்கு கோயில் கட்ட வேண்டும் என்ற நினைவு இருந்தாலும் பொருளாதார நிலையில் அவர்கள் அனைவருமே சுமாராக இருந்ததாலும் மக்கள் தொகை மிகச்சிறியதாக இருந்ததாலும் , முயற்சி எதுவும் பெரிதாக எடுக்காதது வியப்பைத் தருவதல்ல.

தேம்ஸ் நதியின் தென்கரையில் சைவம் இப்படி இருந்த நிலையில் 1975 இல் தமிழ்ப் புத்தாண்டு அன்று வடகரையில் திரு. மெய்யப்பன் என்ற அன்பர் லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் என்ற பெயரிலே ஒரு சமய அமைப்பை நிறுவி மாதந்தோறும் கார்த்திகை வழிபாடு நடாத்தி வந்தார்கள். அந்த அமைப்புக்கு பல வெளிநாட்டு நண்பர்கள் கூட நிதியுதவி செய்தார்கள். ஆக நதியின் இருபக்கமுமே கோயில் பற்றிய பேச்சு எழுந்தது, வளர்ந்தது.

சைவமுன்னேற்றச் சங்கம் (UK) இலங்கையில் உள்ள சங்கத்தின் குழந்தையாக 1977இல் பிறந்தது. இதன் பிறப்புக்கு முக்கிய காரணர்களாக இருந்தவர்கள் திரு. இராமநாதன் அவர்களும், திரு. ஆனந்ததியாகர் அவர்களும் எனலாம். இந்தச் சங்கம் தேம்சின் வடமேற்குப் பகுதியில் உள்ள எசக்ஸ் நாட்டு மக்கள் வழிபட அன்று வழி செய்து கொடுத்தது.

விநாயகப் பெருமான் இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருந்தார். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல பொறுமையை இழந்த விநாயகர் தன்னை மக்கள் மறந்துவிடக் கூடாதே என்று எண்ணி விம்பிள்டனில் திரு இரத்தினசிங்கம் அவர்களுக்கு அருள்பாலித்தார். விளைவு ........1981 இல் விம்பிள்டனில் விநாயகர் ஆலயம் உருவானது.

இப்போது இவை எல்லாம் பழம் கதையாக சரித்திரமாக ஆகிவிட்டன. வழிபட என்று லண்டனிலே நான்கு கோயில்கள் இருக்கின்றன. ஐந்தாவது கோயில் அம்மைக்கு என்று உருவாகிக்கொண்டு இருக்கின்றது. அது தவிர சைவ முன்னேற்றச் சங்கம் பாலர்களுக்கு பண்ணும் சமயமும் கண்ணெனப் போற்றி ஓதுவித்து வருகின்றது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா" என்ற ஔவை மூதாட்டியின் பொன்மொழியைக் கருத்தில் கொண்டு லண்டனிலும் சுற்றுப் புறங்களிலும் வாழும் தமிழ் மக்கள் செயல்படுவதை காணும் தோறும் மனம் களிபேருவகை கொள்கின்றது. அவனருளாலே அவன் தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிறந்திருப்போம்.

சாக்ரடீஸ் உலகப் புகழ் பெற்ற தத்துவஞானி, அவரைக் கிரேக்கர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு விஷம் கொடுத்து அருந்தச் செய்து அவரைச் சாகும்படி செய்கிறார்கள். விஷத்தைக் குடிக்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டே அருந்துகிறார் சாக்ரடீஸ். அவருடன் இருக்கும் பிளேட்டோ " ஐயா ! உங்கள் உடலை எப்படி அடக்கம் செய்வது? " என்று கண்ணீர் ததும்பக் கேட்கிறார்.

"அப்பனே! நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லையா? அழியக் கூடிய உடலை எப்படி அடக்கம் செய்தால் என்ன? அதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? அழிக்க முடியாதது ஆன்மா. அதை எப்படி போற்றுவது என்பதை நான் உணர்ந்து கொண்டுவிட்டேன்! " என்கிறார் சாக்ரடீஸ் . அந்த மேதை நமது உபநிடத நூல்கள் சொல்லும் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர். அதன் உண்மையை உணர்ந்தவர்களுக்குப் பயமில்லை. அதனால்தான் இறக்கும் தருணத்தில் கூட அவருக்கு எந்த விதமான பயமும் கலக்கமும் ஏற்படவில்லை.

# சைவநெறி விளக்கம்

## சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

**வினா :**

இறந்த வீடுகளில் சடலம் இருக்கும்போது தேநீர் அருந்துதல் துடக்கு என்கிறார்கள். இதன் பின்பு ஆலயம் செல்வது தவறு என்கிறார்கள். இது சரியானதா ?

**பதில் :** ஆலயம் மற்றும் வீடுகளில் செய்யப்படும் பூசைகள், சமயச் சடங்குகளில் நாட்டுக்கு நாடு வித்தியாசம் காணப்படுகிறது. இருப்பினும் பொதுவாக இறந்த வீட்டில் சடலம் இருக்கும் வரை உணவருந்துதல் கூடாது. ஏனெனில் சடலம் இருக்கும் வரை அதனின்று வெளியாகும் துர்சக்திகள் அவ்விடத்தில் பரவியிருக்கும். மேலும் அந்தியேட்டி நடைபெறும்வரை ஆத்மா அந்த வீட்டில் உலவுவதாகக் கருதப்படுவதால் அந்த வீட்டிற்குச் சென்றவர்கள் ஆலயத்திற்குச் செல்வதில்லை. தற்காலத்தில் இறந்த வீட்டிற்குச் சென்ற நாளை விட்டு அடுத்த நாளில் ஸ்நானம் செய்து விபூதி தரித்து ஆலயத்திற்கு வந்து நெய்தீபமிடுவது வழக்கத்தில் உள்ளது. அந்தியேட்டி முடியும் வரை நெருங்கிய உறவினர்களைத் தவிர மற்றவர்கள் அவ்வீட்டில் உணவருந்துவது தவிர்க்கப்படலாம்.

**பாலா – Hainault**

**வினா :**

சில சடங்குகளில் நேரத்துக்குகந்த மாதிரி மந்திரங்களைக் குறைத்து கிரிகைகள் செய்யப்படுகின்றன. இவை சரியா ?

**பதில் :**

பொதுவாக சடங்குகளில் சொல்லப்படுகின்ற மந்திரங்களை இரண்டு வகையாகச் சொல்லலாம்.

1. மிக முக்கியமான மந்திரங்கள்.
2. உபசாரத்திற்காகச் சொல்லப்படுகின்ற மந்திரங்கள்.

மிக முக்கியமான மந்திரங்களை எக்காலத்திலும் குறைக்கக் கூடாது. இவை பெரும்பாலும் சிறிய சொற்களாகவே இருக்கும். உபசாரத்திற்காக சொல்லப்படும் மந்திரங்களை இடம் , காலம் இவைகளை அனுசரித்து அதிகமாகவோ குறைவாகவோ சொல்லலாம்.

**ஜெயராஜா – Tooting**

**வினா :**

நமஸ்காரம் செய்யும் முறைகள் வேதத்தில் வகுக்கப்பட்டுள்ளனவா ? அவை பற்றிக் கூறுவீர்களா ?

**பதில் :**

நமஸ்காரம் செய்யும் முறைகளைப் பற்றி வேதத்திலும் ஆகமங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டவகைகளைத் தொகுத்து நல்ல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. கலசத்திலும் வந்துள்ளது. விரிவான கட்டுரை ஒன்றையும் விரைவில் எதிர்பாருங்கள்.

**வினோதினி – மேற்கு ஜேர்மனி**

**வினா :**

கடவுள் இல்லை என்பவர்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?


**பதில் :** இருக்கின்ற ஒன்றைத்தான் இல்லையென்று கூறமுடியும். இல்லாததை உள்ளதென்றோ இல்லையென்றோ கூறுவது முறையாகாது. கடவுளுக்கு சக்தியில்லை. என்று சொல்பவர்களுக்கு தக்க பதில் அளிக்கலாம். கடவுளே இல்லை என்று கூறுபவர்களுக்கு பதிலளிப்பது உயிரை காண்பிப்பதாக கூறி உயிரைப் போக்கிக் காண்பிப்பதற்கு சமமானது.

**சிவகுமார் – கனடா**

அனபுள்ள வாசர்களுக்கு,
இப் பகுதியில் உங்கள் சமய சம்பந்தமான ஐயங்களை அனுப்பி தீர்வு பெற்றுக் கொள்ளலாம். தயவு செய்து உங்கள் ஐயங்களை குறித்த திகதிக்குமுன் அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டுகின்றோம். அடுத்த கலசத்துக்கு நீங்கள் அனுப்ப வேண்டிய திகதி **15 – 06 – 1993** ஆகும்.
முகவரி : **The Editor, 3 Gayfere Road , Clayhall , Ilford, Essex, IG5 OJG**
இணை ஆசிரியர்கள்

# பூமிக்கு வந்த புண்ணிய சீலர்கள்

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்



உலகம் பலரைச் சந்திக்கின்றது. சந்திக்கும் ஜீவராசிகளில் மனித இனம் உயர்ந்ததாக இருக்கின்றது. இந்த மனித இனத்தினுள்ளும் இரண்டு வகையானவர்கள் எம் கண்முன்னே உலாவுகின்றனர். ஆண்டவனிடம் இருந்து சிலர் வருகிறார்கள். ஆண்டவனால் சிலர் படைக்கப்படுகிறார்கள். ஆண்டவனால் படைக்கப்பட்டவர்களை ஈடேற்றுவதற்காகவே ஆண்டவனிடம் இருந்து சிலர் வருவதாக சமய சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவர்களது தலையாய பணி மனித இனத்தை அதன் பாவச் செயல்களில் இருந்து மீட்டு இறை தரிசனத்துக்காக அவர்களை வழிநடத்துவதாகும். இவ்வகையில் பலர் இப்பூமிக்கு வந்து போய்விட்டார்கள். அவர்களைப் பற்றி உங்களுக்கு அறியத் தருவதே இப்பகுதியின் நோக்காகும்.

இப்பகுதியில் புண்ணிய சீலர்களுடை வாழ்க்கை நிகழ்வுகளும் அவர்கள் மனித இனத்தின் மத்தியில் ஆற்றிய பகுதிகளும் இடம் பெறவுள்ளன.

இக்கலசத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வரலாற்று நிகழ்வுகளை தர எண்ணியுள்ளேன்.

மேற்கு வங்காளத்திலே கமார்புகூர் என்ற செழிப்பான கிராமம் உண்டு. இக்கிராமத்திலே மண்சுவர்களால் எழுப்பப் பெற்ற ஒரு சிறு குடிசையில் அன்புக்கும், பண்புக்கும், அறிவிற்கும், இறை பக்திக்கும் எடுத்துக்காட்டாக ஓர் அந்தணர் குடும்பம் வாழ்ந்து வந்தது. கி.பி 1836 ஆம் ஆண்டு மாசி மாதம் 18 ஆம் திகதி அதிகாலையில் இந்தத் தம்பதிகளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் குழந்தைக்கு கதாதரன் என்று பெயரிட்டனர். முல்லைச் சிரிப்பாலும், மழலைச் சொல்லாலும், கொள்ளை அழகாலும் கிராம மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டான் கதாதரன் . சிறு வயதிலேயே கண்டவை, கேட்டவை அனைத்தையும் அப்படியே மனதில் பதிய வைக்கும் அற்புதமான நினைவாற்றல் அவனிடம் இருந்தது. இவனுக்குப் புராண இதிகாசப் பாடல்களெல்லாம் இலகுவாகப் மனதில் பதிந்தன. விழாக்காலங்களில் கிராம மக்கள் நடித்துக் காட்டும் தெய்வ வரலாற்று நாடகங்களை திறந்த கண் திறந்த படி பார்ப்பான். குயவர்கள் கடவுள் வடிவங்களைச் செய்வதைப்பார்த்து வீட்டுக்கு வந்ததும் மண்ணைக் குழைத்து அற்புதமாக வடிவங்கள் செய்து உலரவைத்து வர்ணங்கள் பூசுவான். பச்சைப் பசேல் என்ற வயல்கள், சலசலவென ஓடும் சிற்றாறுகள், நிர்மலமான நீல வானம், காதின் சவ்வுகளை நோக வைக்கும் பறவைகளின் இனிய ஒலி, குழந்தை தவழ்ந்து செல்வது போல் நகர்ந்து செல்லும் மேகக் கூட்டங்கள் ஆகிய இயற்கைக் காட்சிகள் அவன் உள்ளத்தை கிளர்ச்சி கொள்ளச் செய்யும்.

கதாதரனுக்கு ஏழு வயது நடந்து கொண்டிருக்கும் போது நிகழ்ந்த ஒரு சம்பவம் தெய்வீகத்தை வெளிப்படுத்தும் ஒரு அசாதாரண நிகழ்ச்சியாய் அமைந்தது. இந்தச் சம்பவத்தை அவரது வாயால் வந்தவாறே பார்ப்போம். " எனக்கு அப்போது ஏழு வயதிருக்கும். பொரியைத் தின்ற வண்ணம் வயல் வரப்பின் மீது நடந்துகொண்டிருந்தேன். அண்ணார்ந்து

**வரலாற்றுத் தொகுப்பு : கரவை. மு. தயாளன்**


பார்த்தபோது ஒரு பெரிய கருநிற மேகம் மிக விரைவாக வந்து ஆகாயத்தை முழுவதுமாக மூடிக்கொண்டது. வெண்பனி போன்ற கொக்குகளின் கூட்டம் கீழே பறந்து சென்றது. நான் உணர்விழந்து விழுந்தேன். ஆடையில் இருந்த பொரி நாற்புறமும் சிதறியது. அந்நிலையில் என்னைக் கண்டவர்கள் வீட்டிற்கு தூக்கிச் சென்றார்கள். வெளிப்பார்வைக்கு உணர்வற்றவனாகத் தோன்றினும் அக உணர்வில் பேரின்பம் துய்த்தேன் " இது கதாதரனுடைய சிறு வயது ஆன்மீக அனுபவம்.

கதாதரனுடைய சிந்தை தேவியை நினைக்கும் போதெல்லாம் அவளோடு ஒன்றி பரவச நிலையை அடைவது சிறுவயதிலேயே ஆரம்பமாகிவிட்டது. சிவராத்திரி நாளில் ஒரு தடவை அவன் பரவச நிலையை அடைந்திருந்தான். அப்போது அவனுக்கு வயது ஒன்பது. உண்ணா நோன்பிருந்து சிவசிந்தனையில் மனதை ஒருமுகப்படுத்தியிருந்த போது நண்பன் ஒருவனின் வேண்டுகோளை ஏற்று சிவ வேடம் தாங்கி நாடகத்தில் அன்றிரவு நடிப்பதற்கு உடன்பட்டான். அன்றிரவு சிவவேடம் பூண்டு அரங்கின் மீது வந்து நின்ற அளவில் மனம் வேடம் ஏற்ற சிவனிடம் சென்று ஒன்றியது. புறநினைவுகள் அகன்றுபோய் அகமுகப்பட்டு பரவசமுற்றான். அன்றிரவெல்லாம் பரவச நிலை நீடித்தது. மறுநாட்காலையில் தான் உலக நினைவு திரும்பியது.

காலம் நகர்ந்தது. கதாதரனுடைய குடும்பம் பல துன்பங்களுக்கு ஆளாகியது. தந்தை சிவபதமடைநதார். தமையனுடைய மனைவி மரணமானார். தாய் முதுமைப்பருவத்தை எய்தியிருந்தாள். வறுமை அவர்களை விழுங்கிக் கொண்டிருந்தது. இவற்றின் தாக்கங்களால் கதாதரனுடைய உள்ளத்தில் ஆழ்ந்த உணர்ச்சிகள் தோற்றின. உலகம் நிலையில்லாதது. உலக மக்கள் அறிவைத்தேடி ஓடுவது பொருளையும் புகழையும் சேர்க்கவே என்ற எண்ணம் மனதில் வேரூன்றலாயிற்று பள்ளிப்படிப்பில் கவனம் செல்லவில்லை. " இக்கல்வியைக் கற்பதால் உண்மை அறிவும் இறைபக்தியும் பெறமுடியுமா? இறைவனைக் காணவோ உலக துன்பங்களைக் கடக்கவோ உதவமாட்டாத இக்கல்வியால் எனக்காவது என்ன? வெறும் சோறும், கறியுமே மனிதப்பிறவியின் பயனாக மாட்டா ".இப்படி கதாதரனுடைய இளம் உள்ளம் சிந்தனை செய்தது.

வயிற்றுப் பிழைப்பிற்காக கல்கத்தா சென்ற தமையனார் ராம்குமார் கதாதரன் கல்வியில் நாட்டமின்றி இருப்பது அறிந்து பணியில் தமக்குத் துணை புரிவதற்காக அழைத்துச் சென்றார். இந்தக் கதாதரன் தான் ஸ்ரீராமக்கிருஷ்ணர். கல்க்கத்தா மண்ணில் தான் கதாதரன் ஒரு மாபெரும் தீர்க்கதரிசியாக ஞானப்பெருவள்ளலாக உருவானார் . கல்க்கத்தா நகரிலே வசித்து வந்த ராணி ராசமணி என்னும் செல்வச்சீமாட்டி காளி அன்னையை தன்னுடைய இஷ்ட தெய்வமாகக் கொண்டிருந்தாள். இவ்வம்மணி கங்கைக்கரையோரத்திலே இருபது ஏக்கர் நிலத்தை வாங்கி காளி அன்னைக்கு கோயில் கட்டுவித்தாள். இக்கோவிலின் பூசாரியாக நியமனம் செய்யப்பட்ட ராம்குமாருடன் கதாதரன் எனும் ராமகிருஷ்ணர் உதவியாளராக இருந்தார். நாளடைவில் காளி கோவிலின் பூசாரி வேலை ஸ்ரீ ராமக்கிருஷ்ணருக்குக் கிடைத்தது.

பூசாரி வேலையில் அமர்ந்த ஸ்ரீராமக்கிருஷ்ணர் தன்னை முழு மனதுடன் அப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். அதிகாலையில் எழுந்து கங்கையில் நீராடுவார். அன்னையின் புகழைப்பாடியபடியே நந்தவனத்தில் பூக்கள் கொய்வார். மாலைகள் கட்டுவார். கங்கை நீரை குடங்களில் ஏந்தி வந்து அன்னையை ஆசைதீரக் குளிப்பாட்டுவார். ஆடை ஆபரணங்களை அன்னைக்கு அணிவித்து கண்குளிரப் பார்ப்பார். இரவில் வெள்ளிக் கட்டிலில் அன்னையைத் தூங்க வைத்துத் தாலாட்டுப் பாடுவார். இரவிரவாக அன்னையை வழிபடுவார். அன்னையோடு நெருக்கம் தோன்ற அன்னையை நேரிலே காணவேண்டுமென்ற அவா அவருக்கு அதிகரித்தது. எல்லா வல்லமைகளையும் கொண்ட தெய்வம் விக்கிரகத்தில் வரக்கூடாதா? உடம்புகளைப் படைக்கும் தேவி ஓர்



உடம்பு கொண்டு வரக்கூடாதா? என்று ஏங்கத் தொடங்கினார். நாட்கள் மாதங்களாயின. அன்னை காட்சி தரவேயில்லை.

" அவளைக் காண மாட்டாமையால் என் உள்ளத்தில் ஏற்பட்ட வேதனை இவ்வளவு அவ்வளவு அல்ல. ஈரத்துண்டை முறுக்கப் பிழிவதுபோல் யாரோ என் உள்ளத்தைப் பிழிவதை உணர்ந்தேன். வாழ்வதில் பயன் இருப்பதாகத் தெரியவில்லை. உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணி வாளைக் கையிலெடுத்தேன். அக்கணமே அன்னை காட்சி தந்தாள். கோயிலும், கட்டிடங்களும், கதவுகளும் எல்லாமே மறைந்தன. எங்கணும் ஒளிஅலைகள். மூச்சுத் திணறி நினைவிழந்து விழுந்தேன். இக் காட்சிக்குப் பிறகு கற்சிலை மறைந்தது. உயிர்த் துடிப்புமிக்க அன்னை தோன்றினாள். என் கை மீது அன்னையின் மூச்சுப் படுவதை உணர்ந்தேன். உண்மையாகவே உணர்ந்தேன். இரவில் விளக்கேற்றியபின் தெய்வக் கோலத்தோடு அவள் உலாவுவாள். உற்று உற்று பார்ப்பேன். அவள் நிழல் சுவரில் விழுந்ததில்லை. நட்டநடு இரவிலே சிறுமிக்குரிய களிப்புடன் காற்சிலம்புகள் கலகலக்க அவள் மாடிக்குச் செல்வதை கண்டிருக்கிறேன். படபடக்கும் நெஞ்சத்துடன் பின் தொடர்வேன். மாடி வராந்தாவில் நின்று கொண்டு அந்தக் கருநிறத்தழகி, கூந்தல் தவழ கங்கையை நோக்கிக் கொண்டிருப்பாள்."

இப்படியான காட்சிகளினால் தெய்வம் மனிதன் என்ற நிலைபோய், அம்பாள் பக்தன் என்ற நிலையும் போய், தாய் சேய் என்ற நெருக்கம் ஏற்பட்டது. அனைத்துமே அம்மா! அம்மா! என்பதே ஆச்சு. தாயைக் காண ஏங்கும் குழந்தையின் துடிப்பே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் மேலோங்கி நின்றது.

இதற்குப் பிறகு மரபுவழி முறைகளில் கவனம் செலுத்த அவரால் முடியாது போயிற்று. தேவிக்கு இடும் மலர்களை தலையிலும் , தோளிலும் இட்டுக் கொள்வார். பிடி அன்னத்தைக் கையிலேந்தி அன்னைக்கு ஊட்ட முயல்வார். "ஓஹோ! முதலில் நான் சாப்பிடவேண்டுமா ?" என்று தான் உண்பார். அருகில் பூனையைக்கண்டால் பூனையை அம்பாளாய்

எண்ணி உணவைப் படைப்பார். ஒரு சமயம் அன்பரொருவர் நல்ல பட்டுச் சால்வையொன்றை ராமகிருஷ்ணருக்கு அன்பளிப்பாக வழங்கினார். அதனை விருப்புடன் போர்த்திக்கொண்டு திரிந்தார். மறுகணம் அதை வீசி எறிந்தார். காலால் மிதித்தார். " கடவுளை நான் அறிய இது உதவுமா? இதைப் போர்த்திக் கொண்டதும் பிறரைக் காட்டிலும் உயர்ந்தவன் என்ற மனோபாவம் வந்து விடுகிறதே. "என்று கூறி அதனை எறிந்து காறித்துப்பினார். இச் செயல்களினால் இவரைப் பித்தரென்று கோயில் அதிகாரிகள் கருதலாயினர்.

இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட அவரது அன்னை கவலை கொண்டு பிறந்த கிராமத்துக்கு வருமாறு அழைத்தார். ஸ்ரீராமகிருஷ்ணரும் அன்னையின் அழைப்பை ஏற்று பிறந்த மண்ணை நோக்கித் திரும்பினார். அவருக்கு அப்போது வயது 23. அவருக்குத் திருமணம் செய்து பார்க்க அன்னையின் உள்ளம் ஆசைப்பட்டது. வறுமை காரணமாக மணப் பெண்ணுக்குப் பெரும் பொருள் கொடுக்க இயலாது, நல்ல மணமகள் கிடைக்காமல் வருந்தினர். இவர்களின் வாட்டத்தை உணர்ந்த ராமகிருஷ்ணர் ஒரு நாள் மனம் அகமுகப்பட்ட நிலையில் "ஜெயராம்பாடி செல்லுங்கள் அங்கே எனக்கென்றே , குறித்து வைத்திருக்கும் பெண்ணை ராமச்சந்ர முகோபாத்யாயர் வீட்டில் காண்பீர்கள்" என்றார். சில நாட்களில் சிறுமி சாரதைக்கும், ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் திருமணம் நடந்தேறியது.

ஒரு மரம் அது தரும் கனிகளால் மதிக்கப்படுகிறது. இவர்களது இல்லறத்தில் காமமில்லை. இறை சாதனைகளுக்கே இடமிருந்தது. போகத்திற்கிடமில்லை. யோகத்திற்கே இடமிருந்தது. சாரதை பதி பக்தி மிகுந்தவராய் கணவருக்கு உற்ற தோழியாய் உடன் பிறவாச் சகோதரியாக, ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீக வாழ்விற்கு அரும்பெரும் துணையாக, அவரது முதல் ஆன்மீகச் சிஷ்யையாக, தூய அன்னையாக, அனைத்திற்கும் மேலாக குருதேவரின் மறைவிற்குப் பிறகு ஞானத் தாயாக குருதேவர் விட்டுச் சென்ற செயலைச் செய்து முடித்த பெருமை பெற்றவர். இல்லற வாழ்க்கையிலே இருவரும் சேர்ந்து புதிய ஒரு யுகத்தைத் தோற்றுவித்தனர். இல்லறம் என்றால் இதுதான் என்று சொல்லும் அளவுக்கு புதியதொரு வாழ்முறையை தோற்றுவித்தனர்.


ஸ்ரீராமக்கிருஷ்ணர் பைரவி பிராமணியை குருவாக ஏற்று 64 தந்திர முறைகளிலும் தேர்ச்சி பெற்றார். ஆண்டான் – அடிமை, தாய் – சேய், காதலன் – காதலி, நண்பன் முதலான பல பாவனைகளில் இறைவனைக் கண்டு மகிழ்ந்தார். இவர் அத்வைத ஞானம் அடைந்ததன் பயனாக சமயங்கள் அனைத்தும் பூரணத்தை அடையச் செய்யும் நெறிகள் என்பதை உணர்ந்து அவற்றின் உண்மை காண விளைந்தார். முகமதியம், கிறிஸ்தவம் முதலாகிய சமய நெறிகளில் கருத்தை நிறுத்தி அவ்வச்சமயத்திற்குரிய சாதனைகளை மேற்கொண்டார். இது எவரும் செய்து காட்டாத செயற்கரிய செயலாகும். இயேசுவை கிறிஸ்தவ முறைப்படி வழிபட்டபோது நான்காம் நாளில் இயேசுக்கிறிஸ்துவின் அருட்காட்சியையும் பெற்றார். மனித இனத்தை உயிர்ப்பிப்பதற்காக அவதரித்த பூரண அன்பின் வடிவமான இயேசு அவர் முன் தோன்றினார். இயேசு இராமகிருஷ்ணரை அணுகி அவருள் ஒன்றினார். சமாதி நிலை அடைந்த இராமகிருஷ்ணர் சாதாரண நிலைக்கு மீண்டதும் இயேசுவை கடவுளின் அவதாரம் என்று ஏற்றுக்கொண்டார்.

இராமகிருஷ்ணர் அன்னை சாரதையை ஷோடசியாக வழிபட நினைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து அன்னையை அழைத்து ஆசனத்தில் அமரச்செய்து வழிபாடுகளை முறையாகச் செய்து முடித்தபோது, அன்னை சமாதியில் மூழ்கிவிட்டார். மிக நீண்ட நேரத்திற்குப் பின்பே இருவரும் சமாதிநிலையை விட்டு சாதாரண நிலைக்கு வந்தனர். இந்தப்பூசையுடன் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஞான சாதனைகள் முடிவுற்றன. இதற்குப் பின்பு இவரைத் தேடி ஆன்மீக தாபம் கொண்ட பெரியோர்கள் வரத்தொடங்கினர். பல வெளிநாட்டவர்கள் இவரை நாடி வரத்தொ டங்கினர்.

1885 ஆம் ஆண்டு குருதேவருக்கு தொண்டையில் புண் தோன்றி அது நாளடைவில் புற்றுநோயாக முற்றியது. தட்சணேஸ்வரத்தை விட்டு, காசிப்பூர் தோட்ட மாளிகைக்கு அடியார்கள் குருதேவரை கொண்டு சென்றனர். பக்தர்களும் இளம் துறைவிச் சிஷ்யர்களும், அன்னையாரும் இரவுபகல் பாராது சேவை செய்தனர். 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஸ்ரீ ராமகிருஷ்ணர் மகாசமாதி அடைந்தார்.

மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் பிளவுபட்டுக்கிடந்த நாடு ஒற்றுமை காணவும், பெண்ணிற்குப் பெருமையும், பேராதரவு தரவும், ஆண் – பெண், ஏழை – பணக்காரன், படித்தவன் – படியாதவன், ஆஸ்திகன் – நாஸ்திகன், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், தன்சமயம் – பிறசமயம் ஆகிய மேடு பள்ளங்கள் எல்லாம் தகர்க்கப்படவும் இருபதாம் நூற்றாண்டிலே தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரம் வழிகோலியது.

தட்சிணேஸ்வரத்திலுள்ள
காளிகோயில்



# மரணத்திற்குக் காரணம் உண்டா?

இவ்வுலகில் பிறக்கும் எல்லா உயிர்களும் ஒரு நாள் இறக்கும் என்பது நியதி. பசி, பட்டினி, விபத்து. சுகயீனம் காரணமாக பலர் இறந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டை வாடகைக்குப் பெறுபவர் குறித்த காலத்தின் பின் அவ் வீட்டை சொந்தக்காரரிடம் கொடுத்துவிட்டு வெளியேறவேண்டும்.மேலும் தவணை கோரி ஒருவேளை அவ் வீட்டில் சிறிதுகாலம் கூடுதலாக வசிக்கலாம். இது போல் உயிரானது பூமியில் பிறக்கும்போது உடம்பென்ற வீட்டை வாடகைக்குப் பெற்றுக்கொள்கிறது. எவ்வளவு காலம் வாடகைக்கு இருக்கலாம் என்பது அதற்குத் தெரியாது. அது ஆறு நொடிப் பொழுதாகவோ அறுபது வருடங்களாகவோ இருக்கலாம். இவ்வேளையில் பல துன்பங்களுக்குட்பட்டு அங்கலாய்க்கிறது. வைத்தியரின் உதவியால் சிறிதுகாலம் கூடுதலாக உடலில் தங்கியிருந்து இறுதியாக உடலைவிட்டுப் பிரிகிறது. இந்தத் தத்துவத்தை சிறிது ஆராய்வோம்.



விமான விபத்தினால் 100பேர் பலியானார்கள் என்று பத்திரிகையில் செய்தி வெளியாகிறது. இதைப் படித்த இருவர் ஒரே விமானத்தில் இவ்வளவுபேர் எப்படி இறந்தார்கள் என்று பேசிக் கொள்கிறார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்துச் சொன்னான் "விமானம் புறப்படும் போது யாராவது ஒருவர் புகை பிடித்திருக்கலாம்; இதனால் அவ் விமானம் தீப்பிடித்திருக்கலாம், உடனே அது வெடித்து அந்த 100 பேரும் இறந்திருக்கலாம்." என்றான். இதை நம்புவதற்கு மற்றவன் தயாரில்லை. காரணம் இவன் அந்த விமானத்தைக் காணவும் இல்லை, அதில் பயணம் செய்யவும் இல்லை.

**ஆய்வு : சிவ அசோகன்**

அவ் வழியால் ஒரு பெரியவர் வருகிறார். இவர்கள் தங்களது சந்தேகத்தை அவரிடம் கேட்கின்றனர். பெரியவரோ 100 பேரும் இறக்கவேண்டும் என்றது நியதி. இறந்தார்கள்! நீங்கள் ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்றார்.

பெரியவர் சொன்ன பதிலுக்குப் பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் உள்ள பழி அஞ்சிய படலத்தில் எவ்வாறு விளக்கம் பெறப்படுகின்றதென்பதைச் சற்று அவதானிப்போம்.

அனந்தகுணன் என்கின்ற பாண்டிய மன்னன் மிகவும் நேர்மையுடையவன். அவனுடைய ஆட்சிக்காலத்தில் திருப்புத்தூரில் இருந்து ஒரு அந்தணன் தன் மனைவியோடும் பிறந்து இருபத்தொரு நாட்கள் நிரம்பிய குழந்தையோடும் புறப்பட்டு மதுரைக்குச் சென்றான். அந்தக் காலத்தில் வாகன வசதிகள் ஏதும் இல்லாததால் அவர்கள் அந்த 40 கல் தூரத்தை நடந்தே செல்கிறார்கள். அப்படிச் செல்லும் போது ஒரு பெரிய ஆலமர நிழலில் களைப்பாறுகிறார்கள். அந்தணன் மனைவிக்கு தாகம் மிகுதியாக , அவன் மனைவியையும் குழந்தையையும் அம் மரத்தடியில் விட்டுவிட்டுத் தண்ணீர் எடுக்கச் சென்றுவிட்டான். நீண்ட தூரம் நடந்த களைப்பினால் அந்த ஆலமரத்தின் அடியில் குழந்தையை அணைத்த வண்ணம் அந்தணன் மனைவி படுத்துக் கொண்டாள்.

காற்று வீசியது. மிக வேகமாக வீசியது. அந்தப் பிரமாண்டமான ஆலமரத்திலே முன்னர் ஒரு பறவையை குறிபார்த்து ஒரு வேடன் எய்த அம்பு ஒரு கிளையில் பொருந்திக் கொண்டிருந்தது. வேகமாக வீசிய காற்றின் காரணமாக அந்த அம்பு தலைகீழாகப் பாய்ந்து கீழே படுத்திருந்த அந்தணன் மனைவியின் வயிற்றைத் தைத்தது. அந்தணன் மனைவி இறந்தாள். அவ்வழியால் வந்த வேடுவன் ஒருவன் அந்த ஆலமரத்தின் பக்கத்தில் அமர்ந்து களைப்பாறிக் கொண டிருந்தான்.

தண்ணீர் எடுக்கப் போன அந்தணன் திரும்பி வந்து தன்னுடைய மனைவி அம்பு தைத்து இறந்து கிடப்பதையும் ஒரு வேடன் பக்கத்தில் அமர்ந்து இருப்பதையும் கண்டான். அவ்வேடுவன் தான் தன் மனைவியைக் கொன்றுவிட்டதாக எண்ணி அந்த வேடுவனைத் திட்டினான். பாவம் ஒன்றும் அறியாக வேடுவன் திகைத்தான். அந்த வேடுவன் சொன்னான் "அந்தணா! அவசரப்படாதே உன்னுடைய மனைவியை நான் கொல்லவில்லை." அந்தணன் மிகுந்த கோபத்துடன் தான் மன்னரிடம் நீதி உரைக்கப்போவதாகக் கூறினான். குற்றமேதும் செய்யாத வேடுவன் தான் உடன் வருவதற்கு சம்மதித்தான்.

மன்னனின் அரண்மனைக்கு இருவரும் சென்றார்கள். அந்தணன் மன்னரிடம் வேடுவன் தன் மனைவியை கொன்றதாகவும் அதற்கு தக்க நீதி வழங்க வேண்டும் என்றும் முறையிட்டான். ஆனால் வேடுவனோ தான் ஒரு பாவமும் அறியேனென்றும் , அந்தணன் மனைவியின் இறப்பிற்கு தான் எந்த விதத்திலும் காரணமல்ல என்றும் வேண்டி நின்றான். மன்னன் நீதிபதிகளை அழைத்து இந்த வழக்கை விசாரித்தான். நீதிபதிகளோ அந்தணன் மனைவியை வேடுவன் தான் கொன்றிருக்க வேண்டும் என்று ஆங்காங்கே கிடைக்கப்பெற்ற ஆதாரங்களை வைத்து தீர்ப்பு வழங்கினார்கள்.

வேடுவன் தான் அந்தணன் மனைவியை கொலை செய்யவில்லை என்றும் நீங்கள் என்னைத் தூக்கில் இட்டாலும் தான் அதற்கு அஞ்சப் போவதில்லை , ஆனால் ஒரு நிரபராதியை கொன்ற பழி உங்களை நிச்சயம் சாரும் என்றும் சொன்னான்.

பாண்டிய மன்னன் மிகுந்த கடவுள் பக்தியுடையவர்.தனது ஆட்சியை நீதி வழுவாது ஆண்டுவந்தவன். சற்று யோசித்தான். வேடுவன் நிரபராதியாயின் அவனைத் தூக்கிலிட்ட பழி தன்னைச் சாரும் என்று அஞ்சினான். மன்னன் தீர்ப்பு எதுவும் வழங்காது, வேடுவனைச்

சிறையிலிட்டு மிக விரைவில் தான் சரியான தீர்ப்பு வழங்குவதாக அந்தணனுக்குச் சொன்னான்.

மன்னன் தனது குலதெய்வமாகிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுக்குச் சென்று தான் சரியான நீதி வழங்க அருள் புரியுமாறு வேண்டி நின்றான். அப்போது "மன்னா! நாளை இந்நகருக்கு வெளியே உள்ள கிராமத்தில் மணவிழா நடைபெறவுள்ளது. அந்த வீட்டிற்கு நீ அந்தணனுடன் வருக" என்றொரு அசரீதி கேட்டது. மன்னன் மகிழ்ந்தான். மறுநாள் மாறுவேடம்பூண்டு அந்தணனுடன் மணவீட்டிற்குச் சென்று ஒரு பக்கமாக அமர்ந்திருந்தார்கள். அப்போது இவர்கள் இருவரது கண்களுக்கு மட்டும் புலப்படும்படியாக இரண்டு கிங்கரர்கள் (யமதூதுவர்கள்) பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு கிங்கரன் மற்றவனைப் பார்த்து, எமக்கிட்ட கட்டளைப்படி இந்த மணமகளின் கழுத்தில் தாலி ஏறுமுன் மணமகனின் உயிரைப் பறிக்க வேண்டும் என்ன காரணம் காட்டி மணமகனின் உயிரை உடம்பிலிருந்து பிரிப்பது என்று கேட்டான். அதற்கு இரண்டாமவன் நாம் என்ன காரணம் காட்ட வேண்டியுள்ளது ?. அன்று நாம் என்ன செய்தோம். அந்த அந்தணன் மனைவியின் உயிரை எடுப்பதற்கு முன்னர் எப்போதோ ஒரு வேடுவன் எய்த அம்பு அந்த ஆலமரத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. பலத்த காற்றை வீசச் செய்து அந்த அம்பு அவளை தைத்ததன் மூலம் எமது காரியத்தை செயல்ப்படுத்தினோம் பாவம் அந்தப் பக்கம் வந்த வேடுவன் சிக்கிக் கொண்டு தவிக்கிறான். இந்த மணமகனின் உயிரைப் பிரிப்பதற்கு அவன் வீட்டின் பின்பக்கத்தில் கட்டிவைத்திருக்கும் மாட்டை அவிழ்த்து விடுவதன் மூலம், தாலி கட்டும் சமயம் மங்கள வாத்தியங்கள் முழங்கும் போது அந்த மாடு வெருண்டு அந்த மணமகனைக் கொல்லட்டும் என்றான்.

இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மன்னனும் அந்தணனும் திகைத்தார்கள். கிங்கரர்கள் பேசிக்கொண்டபடி தாலிகட்டும் சமயம் மங்கள வாத்தியங்கள் முழங்கின. ஒரு மாடு வெருண்டோடி வந்து அந்த மணமகனை தனது கொம்பால் குத்திக் கொன்றது. இதைக் கண்ணுற்ற அந்தணனும் அரசனும் வேடுவன் அந்தணன் மனைவியைக் கொல்லவில்லை என ஏகமனதாக முடிவு செய்தார்கள்.

இக்கதையில் மறைந்திருக்கும் அரிய தத்துவத்தை ஆராயுமிடத்து, அவரவர் உடம்பில் இருந்து உயிர் பிரியும் நேரம் வந்ததும் அது எவ்வித காரணமும் இல்லாமல் பிரிகிறது. ஆனால் அவரவர் காரணம் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது தான் உலகம்.

"காயத்தில் உயிர் வருவதும் பிரிவதும்
எந்தக்கணம் என்று யார் கண்டார்கள்?
கணமதனில் பிறந்து இரும் இக் காயத்தின்
வரும் பயனை உணர்வுடையார் பெறுவர்
உணர்வு ஒன்றுமிலார்க்கு ஒன்றுமில்லை."

பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றுக்கு அருகே மட்டும் விழுந்து கும்பிடவேண்டும். மற்ற இடங்களில் விழுந்து கும்பிடக் கூடாது. கிழக்கு நோக்கிய கோயிலில் வடக்கு முகமாக விழுந்து வணங்க வேண்டும். மேற்கு நோக்கிய கோயிலுக்கும் இது பொருந்தும். வடக்குத் தெற்கு நோக்கிய கோயில்களில் கிழக்கு முகமாக விழுந்து வணங்க வேண்டும்.

சற்குருநாதன் திருவருளை நாடி நிற்பவனுக்கு அது தானாகவே கிடைக்கின்றது. அப்படிக் கிடைக்கப் பெற்றவன் ஏமாறுவதில்லை , ஏமாற்றுவதில்லை. திருதான், குருவாக அருள் புரிகிறது. அந்தக் குருவே திருவென்று உணரும் காலம் அமைதியின் இருப்பிடமாகிறது.
அவன் தன்னை அண்டினோரின் அசதியை, வசதியாக்கி அறிவினைப் பேரறிவாக்கி, இன்பத்தை பேரின்பமாக்கி தன்னையே ஈந்து தானாகவே செய்வதில் சமர்த்தன்.

# கலசம் வெளியீட்டு விழா

தைமாதத்தில் ஒரு இனிய மாலைவேளை!
லண்டன் ஸ்ரீமுருகன் கோவிலில் , சைவ முன்னேற்றச் சங்கத்தின் உன்னத வெளியீடான 'கலசம்' என்னும் ஆத்மீகக் காலாண்டிதழ் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் கோலாகலமாக வெளியிடப்பட்டது. திருமுறை தந்த நால்வர் ஒருபுறமும், திருமுறைகளைக்கொண்ட கோயில் இன்னொரு புறமும் இருக்க கலசம் சஞ்சிகை வெளியீடு திருமுறை பாடுதலோடு அண்ணளவாக மூன்று மணிக்கு ஆரம்பமானது.




சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளர் வரவேற்புரை வழங்க சங்கத் தலைவரின் தலைமையுரையோடு கலச ஆசிரியர்குழு அறிமுகம் தொடர்ந்தது. பின்பு கலசம் சஞ்சிகை இணை ஆசிரியரால் அறிமுகம் செய்து வைத்தலோடு முதற்பிரதி வழங்கல் தொடர்ந்தது. பக்தர்கள் மத்தியில் சஞ்சிகை கொண்டு செல்லப்பட்டது. மிகுந்த ஆர்வத்துடன் எல்லோரும் புத்தகத்தை வாங்கிய காட்சிகள் நெஞ்சை நிறைத்தன. தொடர்ந்து அங்கு வருகை தந்திருந்த சகல ஆலய தர்மகர்த்தாக்களும் தேவர்கள் பூமாரி பொழிந்தது போல் வாழ்த்துரைகளை அள்ளிவழங்கினர். வாழ்த்துரைகளால் மூடப்பட்டு மயங்கிக்கிடந்த கலசத்தை மயக்கம் தெளிவிக்கும் நோக்கோடு ஆய்வாளர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். சுவையானதும் தேவையானதுமான அபிப்பிராயங்கள் அவர்களிடமிருந்து வந்தன. நேரம் கட்டுப்பாட்டை மீறிவிட்டது. எம்பெருமான் முருகனுக்கான பூசைக்காலம் ஆரம்பமாகிவிட்டது. காலந்தாழ்த்தாமல் நன்றியுரையுடன் வெளியீட்டுவிழா இனிதே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

# பெண்ணின் பெருமையே பெருமை!

பெண்ணின் பெருமையைப் பற்றி அதுவும் இந்த ஆங்கிலேய நாட்டில் எழுத என்ன இருக்கிறது என பலர் கேட்கலாம். இப்படி நினைப்பது மகா தவறு. சிறந்த பெண் வீட்டில் உள்ள குத்துவிளக்குப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள். ஆண்டவனை அர்த்தநாரீஸ்வரராக வழிபடு கின்றோம். இப்படியான எம்மத்தியில் பெண்ணினத்துக்கான மதிப்பு நிரம்பக் குறைவாக உள்ளது. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை உடைய மனிதன் பெண்ணை ஒரு ஈனப்பிறவியாக நோக்குதல் மிகமிக வருந்தத்தக்கதாகும்.

இந்த சமுதாயத்திலே பெண்ணுக்குச் சரிசமமான இடம் கொடுக்க ப்படுவதில்லை. இதற்கு ஆண்களின் அடக்கி ஆளும் தன்மையும் பெண்களின் அடங்கி வாழ்ந்த பழக்கமுமே காரணமாகும். இந்தத் தன்மையை பாரதி பின்வருமாறு கூறுகிறான்:–

**பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரந்தான்**
**பேணுமாயின் பிறகொரு தாள்வில்லை**
**கண்ணைக்காக்கும் இரண்டிமை போலவே**
**காதலின்பத்தைக் காத்திடு வோமடா**

பெண்ணுக்கு உண்மையில் விடுதலை கிடைத்துவிட்டதா? இல்லையே!

**மணி சேகரன்**

இந்த ஆங்கில நாட்டிலும் அவள் ஆணுக்குக் கீழாகவே மதி க்கப்படுகின்றாள். இந்த நிலை ஒழிய வேண்டும். இதற்காக நான் பெண்ணை ஆணுக்கு மேலாக உயர்த்திச் சொல்கின்றேனென்று அர்த்தம் கொள்ளக் கூடாது. ஆண் சில விடயங்களில் உயர்ந்து நின்றால் பெண் சில விடயங்களில் உயர்ந்து நிற்கின்றாள். இது உலகத்தின் இயற்கை நியதி. விவாகம் செய்து கொண்ட ஆணுக்கு பெண் உயிர்த்துணை இதே போன்று மனைவிக்குப் புருஷன் ஊன்று கோல். ஏன் சிவனே பார்வதியை தன் பாதியாக எடுத்து ஆணும் பெண்ணும் சமம் என்று நிலையை விளக்குவதை நாம் அவதானிக்கலாம்.

ஆணுக்கு பெண் சரிநிகர் என்று கூறும் நாங்கள் படித்துப் பட்டம் பெற்ற பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்கும் போது பணம் கொடுக்கும் பண்டமாற்று வியாபாரம் செய்கின்றோம். இரண்டு மனித உயிர்களுக்கு இடையில் உருவாக இருக்கும் புனித உறவுக்கு வியாபார முலாம் பூசுவதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. இவ்வழக்கு ஒழிய வேண்டும். பெண்ணாகிய அம்மாக்களும் ஆணாகிய அப்பாக்களும் மாப்பிளைகளும் மணப்பெண்களும் ஒத்துழைக்க வேண்டும். இது சமுதாயப்பிரச்சனையாக இன்று உருவெடுத்துள்ளது.

வாழ்க்கை என்பது கரடு முரடான பாதை. இங்கு சூறாவளியும் அடிக்கலாம். குளிர் பனியும் பெய்யலாம். இந்நிலையில் ஒரு பெண்ணினுடைய பங்களிப்பு வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. கணவனுக்கு அவள் ஒளிவிளக்காக இருக்கின்றாள்.

இதனை பாரதியாரும்" **உயிரைக்காக்கும் உயிரினைச் சேர்த்திடும், உயிரினுக்குயிராய் இன்பமாகிடும் , உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா , ஊது கொம்புகள் ஆடுகளிகொண்டே** " என்கின்றார். கும்மிப்பாட்டில் " **காதலன் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து மாதரங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சிபெறச் செய்து வாழ்வமடி.**"என்று கூறுகின்றார்.

பெண்ணின் பெருமையைக் கூற வரும் திருவள்ளுவரும் "**இல்லதென் இல்லவள் மாண்பானாள் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை**" என்றும் பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின் என்றும் கூறுகின்றார்.

பெண்ணின் பெருமைக்கு அளவேயில்லை. அவள் தனித்து இயங்க முடியும் ஆனால் அந்த இயக்கத்தில் ஒளி இருக்காது. ஆகவே வேதங்கள் படைக்கவும் உலகத்தில் சாதனை செய்யவும் பெண்கள் சரிசமானமாக ஆண்களோடு வாழவும் காலம் வழிசமைக்குமென்று நம்புகின்றேன்.



# எழுத்துலகில் இளைய ☺ நெஞ்சங்கள் ☺

## நான் விரும்பும் தாத்தா

நான் மறக்க முடியாத முகம் என் தாத்தாவின் முகம். அவர் எனக்குக் காட்டிய அன்பு, பாசம் சொல்ல முடியாதது! அவருக்கு இருந்த வீரமும், துணிவும் நான் வேறு யாரிடமும் காணவில்லை. நானும் அவரைப் போல வீர வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். எப்போதும் நல்ல மனதுடன் காரியங்களைச் செய்து முடிக்க விரும்புகிறேன்.

ஒரு நாள் தாத்தாவுடன் விளையாடிக்கொண்டிருந்தேன். அவர், கையில் ஒரு கத்தியுடன் வேலையாக இருந்தார். நான் அவரின் முதுகில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தேன். தவறுதலாக, நான் விளையாடும் போது கத்தி அவரின் கண்ணில் குத்திவிட்டது. அப்போது எனக்கு ஆறு வயது. தாத்தாவை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். திரும்பி வந்த தாத்தாவுக்கு என் மீது கொஞ்சம் கூட கோபமே இல்லை. அதிலிருந்து தாத்தாவுக்கு என் மீதிருந்த எல்லையற்ற அன்பை உணர்ந்தேன்.

சமிஸ்ரா சீலன்
வயது 16
மீனாட்சி நடனப் பாடசாலை மாணவி

## சரஸ்வதி

அன்னை சரஸ்வதி வெள்ளை நிறத் தாமரைப் பூவில் வீற்றிருப்பாள். சரஸ்வதி தேவி எங்களுக்குக் கல்வியைத் தரும் தெய்வம். ஒரு கையில் வீணையையும் மற்றொரு கையில் வேதத்தையும் ஏந்தி இருப்பாள். அன்னை சரஸ்வதிக்கு கலைவாணி, நாமகள், சகலகலாவல்லி என்னும் திருப்பெயர்களும் உண்டு. நாங்கள் நவராத்திரிப் பூசையின் போது கடைசி மூன்று நாட்களிலும் சரஸ்வதி தேவிக்கு விசேட பூசை செய்து வணங்குவோம்.

செல்வி. வாணி உத்தமகுணன்
வயது 11.
நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவி

## என்னுடைய அண்ணா

எனக்கு இரண்டு அண்ணன்கள் இருக்கிறார்கள். எனது பெரிய அண்ணனின் பெயர் நிரஞ்சன். நான் நிரி என்று அழைப்பேன். இவருக்கு வயது பதினெட்டு. இவர் கேம்பிரிட்ஜில் (Cambridge) படிக்கிறார். விடுதலை நாட்களில் வீட்டுக்கு வருவார். அப்போது எனக்கு பாடம் செல்லித் தருவார். நாங்கள் எல்லாரும் சேர்ந்து கொம்பியூட்டர் ( Computer) விளையாடுவோம். சில நேரங்களில் நாங்கள் இரண்டு பேரும் சண்டையும் பிடிப்போம்.

நிரி அண்ணா சிறு வயதில் தமிழ் படித்தவர். அவருக்குத் தமிழ் எழுதவும், வாசிக்கவும், கதைக்கவும் தெரியும். சில சமயங்களில் எனக்குத் தமிழ்ப் பாடம் சொல்லித் தருவார். அவர் புல்லாங்குழல் நன்றாக வாசிப்பார். இன்னும் படித்துக் கொண்டிருக்கிறார். அவர் பியானோவும் (Piano) படிக்கிறார். ஐந்தாம் பிரிவில் சித்தி அடைந்துள்ளார். அண்ணாவுக்கு பெரிய புத்தகங்கள் வாசிக்கவும் விருப்பம். எனக்கு என் அண்ணா மேல் நல்ல விருப்பம் உண்டு.

செல்வி. அனுஷியா நிர்மலானந்தன்
வயது 10
நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவி

# திருவள்ளுவர்

திருவள்ளுவர் ஒரு அற்புதமான உலகப் பெரியவர். இவர் 2,500 ஆண்டுகளுக்கு முன்பு சென்னைப் பட்டணத்திற்கு அருகே உள்ள மைலாப்பூரில் பிறந்தார். திருவள்ளுவர் தனது குலத் தொழிலாகிய நெசவுத் தொழிலையே மேற்கொண்டார். பின்பு தனது வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களையும், தான் கற்று அறிந்தவைகளையும் ஒன்றாகக் கொண்டு திருக்குறள் என்னும் அரிய நூலை இயற்றினார். திருக்குறள் 1.330 குறள்களைக் கொண்டது. இவை 133 அதிகாரங்களாக, வெவ்வேறு தலையங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் இரண்டு சிறு வரிகள் அடங்கிய பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளன.

செல்வி. கல்பனா சுப்பிரமணியம்
**வயது 11**
நால்வர் தமிழ் கலை நிலைய மாணவி

# மறு பிறப்பில் எனக்கு . . . . . . . .

மறு பிறப்பில் எனக்கு ஒரு சிங்கமாகப் பிறப்பதற்கு மனதில் ஒரு விருப்பம் உண்டு. மனிதனாகப் பிறக்காமல் இருப்பது நல்லதே. மனித வாழ்க்கை ஒரு கடினமான வாழ்க்கை. மனிதனாக இருந்தால் வேலைக்குச் செல்ல வேண்டும். களைத்து வீடு வந்து சாப்பிட்டு படுக்க வேண்டும். ஆனால் சிங்கமாக இருந்தால் நினைத்ததைச் செய்து, விரும்பினவற்றை உண்ணலாம். விரும்பிய நேரம் படுக்கலாம்.
ஒரு பிள்ளை ஐந்து நாட்களும் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். ஆனால் சிங்கத்தின் குட்டி காட்டில் விரும்பியபடி விளையாடித் திரியும். மனிதனாக இருப்பதால் ஒரு நன்மை, நீண்ட நாட்கள் வாழ சந்தர்ப்பம் உண்டு.
சிங்கத்தின் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியான, செலவு குறைந்த வாழ்க்கை. சிங்கம் தெருவில் போனால் எல்லோரும் மரியாதையாக விலகுவார்கள். ஆனால் மனிதர்கள் நடந்தால் இப்படி விலக மாட்டார்கள்.
சிங்கம் செய்யும் ஒரு பாவம் உயிர்களைக் கொல்வதே. ஆனால் மனிதர் ஆசையை வளர்த்து, இன்னும் இன்னும் கடவுளிடம் கேட்டு நன்றி இல்லாமல் நடக்கிறார்கள்.
சிங்கத்தின் வாழ்க்கை நல்லது. அது எனக்கு விருப்பமான வாழ்க்கை.

செல்வன். பவன் இராமநாதன்
**வயது 14**
நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவர்

# என் கனவு நிறைவேறுமா?

அன்று பாடசாலை விடுமுறை நாள். வழமைபோல் நான் என் படிப்பை முடித்து விட்டு தூங்கிவிட்டேன். திடீரென என் கண்முன்னால் ஒரு பெரிய உருவம் என் பெயரை சொல்லி அழைத்தது. நான் என்ன என்று கேட்டேன். இதோ இதில் பதினெட்டு திறப்புகள் உள்ளன. இதில் ஒன்று ஒரு பெரிய மாளிகையினது. நீ எடுத்த திறப்பு சரியானால் உனக்கே இந்த மாளிகை என்றது. நானும் ஒரு திறப்பை தேர்ந்தெடுத்துக் கொடுத்தேன்.
என்ன ஆச்சரியம் நான் எடுத்த திறப்பு அந்த மாளிகையை திறந்து வைத்தது. எனக்கு அந்த உருவம் மாளிகையைத் தந்தது. என் மனக் கனவு நிறைவேறுமா?
சுபாஞ்சி வாமனானந்தன்
**வயது 10**
நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவி

# தொலைக்காட்சிப் பெட்டியின் சுயசரிதை.

நான் யார் தெரியுமா ? உரிமைகளையும் உடமைகளையும் பறிகொடுத்துவிட்டு அழுக்குத் தொட்டியை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் உபயோகமற்ற தொலைக்காட்சிப்பெட்டி தான் நான்.
எனது பெயர் 'சொனி ' . நான் ஜப்பானில் தயாரிக்கப்பட்டு நண்பர்களோடு இங்கிலாந்திற்கு கப்பலில் இறக்குமதி செய்யப்பட்டேன். சிறிது நேரத்தின் பின் கடைக்காரர்கள் வந்து என்னையும் எனது நண்பர்களையும் வாகனத்தில் ஏற்றிச் சென்றார்கள். நெடுநேரப் பிரயாணத்தின் பின்பு அந்த

வாகனத்தை கடைகள் முன்பு நிறுத்திவிட்டு நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தார்கள். நான் நினைத்தபடி என்னையும் எனது நண்பர்களையும் தூக்கிச் சென்றார்கள். கடையில் எம்மை வந்து பார்த்த ஒரு பணக்காரக் குடும்பம் என்மீது ஆசை கொண்டு வாங்கிச் சென்றார்கள். நானும் அவர்களுடன் மகிழ்ச்சியோடு சென்றேன். அன்று முதல் அவர்கள் என்னை நெடு நேரம் பார்த்த வண்ணம் இருப்பார்கள். விடுமுறைகளில் எனக்கு ஓய்வே தராமல் என்னை உபயோகிப்பார்கள். நாட்களோ அலைகள் போல் சென்றன. என்னுடைய சில பாகங்கள் பழுதுபடத் தொடங்கின.அவர்கள் என்னைக் கவனியாது விட்டுவிட்டார்கள். சில நாட்களின் பின் அவர்கள் புதிய நண்பனை வாங்கி வந்து எனது இடத்தில் வைத்துவிட்டு , என்னை அழுக்குப் பெட்டியில் போட்டுவிட்டார்கள். நானோ எனது பழைய வாழ்வை நினைத்து அழுத வண்ணம் இருக்கின்றேன்.

சிவகுமணன் – கந்தசாமித்துரை
வயது – 14

# பிள்ளையார்

பிள்ளையார் ஒரு இறைவன். பிள்ளையார் யானை முகம் கொண்டவர் . பிள்ளையாரின் தம்பி பெயர் முருகன். பிள்ளையாரின் வாகனம் எலி. பிள்ளையாருக்கு விநாயகர் , கணேசன், என இரு பெயர்கள் உண்டு. பிள்ளையாரின் அப்பாவின் பெயர் சிவபெருமான். பிள்ளையாரின் அம்மாவின் பெயர் பார்வதி.

முகுந்தன் பாலசேகரம்.
வயது – 12
நால்வர் தமிழ்கலை நிலைய மாணவன்.





முருகேசு யோகலிங்கம் ஞாபகார்த்த பரிசுத் திட்டத்திற்கமைய
மேற்படி கட்டுரைகளுக்குப் பரிசளிக்கப்படும்.
அடுத்த இதழுக்குரிய கட்டுரைகளை **18 – 06 – 1993**ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். மாணவர்கள் தமது கட்டுரைகளை எமக்கு அனுப்பும் முன் தமக்கென ஒரு பிரதியை வைத்துக்கொள்ளும் படி பணிவுடன் நினைவுபடுத்துகின்றோம்.

# குங்கிலியக் கலய நாயனார் (கலயர்)

# KUNGKILIYA-K-KALAYA NAAYANAR (KALAYAR)

*- ShanthiAnanth-*

The Tamil Devotional Classic **PERIA PURANAM - பெரிய புராணம்**, meaning "The Great Epic" by **Sekkilahar - சேக்கிழார்** describes the saga of the sixty three servitors (Nayanmars) of **Lord Sivaperuman** - அறுபத்து மூன்று நாயன்மார்கள் These Nayanmars are of both sexes and of all ages, and range from tribal hunters to emperors of vast domains. The trials and tribulations they cheerfully undergo and the incredible sacrifices they make for Sivaperuman's sake take our breath away. In this issue of **'Kalasam'** Magazine we are pursuing the story of one of the sixty three Nayanars known as **KALAYANAAR - கலயனார்**

Kalayanaar was born in the city **Thirukkadavoor- திருக்கடவூர்.** He worshipped Lord Siva by burning frankincense (High quality aromatic gum resin burnt as incense) at the shrine of Lord Siva. In Tamil this incense is known as சாம்பிராணி or குங்கிலியம் For this reason he was known as **Kungkiliya-k-kalayar - குங்கிலியக் கலய நாயனார்**

He continued to observe this course of service everyday for many years. Due to the financial cost of this devine service his wealth dwindled. He had to sell his land and various other belongings to continue with burning frankincense at Lord Siva's temple. His children and wife spent days without food. Kalayanaar's wife couldn't stand to see children suffering, therefore she asked Kalayanaar to sell her gold **Thaali - தாலி** and buy some paddy.



Thaali is a trinket of gold strung on a string and worn around the neck as a symbol of the married state of a woman. It corresponds to the wedding ring of the west.

Lord Siva decided to show the whole world Kalayanaar's devotion and his unbroken service.



When Kalayanaar was going to buy paddy with the Thaali a merchant carrying a sack full of frankincense appeared before him. Kalayanaar asked : "What does the bag contain?" The merchant answered him by saying : "It contains superior quality frankincense.

Kalayanaar was thrilled and thought that he was extremely fortunate. His thoughts were about buying this frankincense and burning it at the Siva's shrine.


With exceeding joy, he told the merchant that he will exchange the gold for the frankincense. The merchant gave Kalayanaar the bag and left happily with the Thaali. Kalayanaar couldn't remember anything about his children's suffering nor his wife's request to buy paddy.

Kalayanaar didn't want to waste a moment. he hurried with joy to the Temple. There he started to worship Siva by burning the frankincense



At home his wife and children went to sleep feeling hungry. Lord Siva blessed Kalayanaar's house with great wealth and huge amounts of paddy. Kalayanaar's wife, realising Lord Siva's kindness, waited eagerly for her husband's arrival.

In the Temple while he was resting Kalayanaar heard a heavenly voice, saying that "You are too tired, go home and eat." Kalayanaar obeyed God's wish and went home.



There he saw the wealth and comforts given to him by Sivaperuman. From then on Kalayanaar continued his devotion to Siva in the same manner by burning frankincense.

Kalayanaar continued to live serving God in Thirukkadavoor. He came to know about the tilted Sivalingam in **Thirup-pannanth-thall - திருப்பனந்தாள்.** The Lingam in this temple had gone out of the vertical position and had leaned over to one side. The Choula king wanted to correct this, he made every effort and failed. He couldn't restore the Sivalingam to the original position even after using elephants and his army. The King was deeply distressed.

Kalayanaar wanted to worship this Temple. He arrived at Thirup-pannanth-thall and saw the distressed King and the army lying about on the ground overcome by weariness.

He felt that he too should experience this weariness and weakness, which was felt by the king's soldiers and all others who have tried very hard to straighten the Sivalingam. Therefore he tied a rope around his neck and looped it around the Lingam and began to strain at the rope.

God couldn't resist giving-in to Kalayanaar's extreme devotion. The strong-willed devotion and the deep love of Kalayanaar couldn't keep Sivaperuman tilted. The Lingam stood erect. The **Devars - தேவர்கள்** in the sky above roared with delight.

We need to look at this incident carefully. Kalayanaar did not think that as a single person he could straighten the Lingam. With this attitude he would not have achieved any success. Kalayanaar did not try to show that he is greater than anyone else. He thought differently.



According to **Sekkilahar - சேக்கிழார்,** Kalayanaar wanted to share the pain and the weakness felt by all others. He decided to join them. This attitude of treating others' suffering as his own is what made God respond.

**SUCH IS THE STRENGTH OF SPIRITUAL LOVE.**

# கலசம் சந்தா விண்ணப்பப் படிவம்

***3.GAYFERE ROAD***
***CLAYHALL***
***ILFORD***
***IG5 OJG***

முழுப்பெயர்

முகவரி

தொலைபேசி இல

சந்தா தேவையான காலம்

**இங்கிலாந்து :**

**3 வருடம் (12 பிரதிகள்)** £ 9

**பிறநாடுகள்:**

**1 வருடம் (ஐரோப்பா)** £6.00

3 வருடம் (ஐரோப்பா) £18.00

ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதமூலம் எம்முடன் தொடர்பு கொண்டு சந்தா விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் .
உங்கள் சந்தாப் பத்திரம் எம்மை வந்தடைந்ததும் நாம் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வோம்.

கலசத்துக்கு அனுப்பப்படும் காசோலைகள் யாவும் SAIVA MUNNETTA SANGAM (U.K) என்ற பெயருக்கே எழுதப்படுதல் வேண்டும்.

இப் பத்திரத்தைப் பிரதிசெய்து நிரப்பி அனுப்பவும்




உ

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

சைவ முன்னேற்றச் சங்கம் (U.K)

SAIVA MUNNETTA SANGAM (U.K)

SMS(UK) , 46 HANOVER GARDENS , HAINAULT, ILFORD,IG6 2RA TEL: 081 500 2680




# அன்பான வேண்டுகோள் !

அன்புடையீர்,

1989ம் ஆண்டு 2ம் திகதி ஆடி மாதம் எமது கட்டிடத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உங்கள் இல்லங்களை நாடி வந்து எமது உயரிய நோக்கங்களுக்காகப் பணம் சேர்த்து வருகிறோம். இப்படிச் சேர்க்கப்படும் பணத்தைக்கொண்டு,

1. கலாச்சார நிலையம் ஒன்றை அமைக்கவும்

2. தமிழ் மக்களது முக்கிய கலாச்சார வைபவங்களை வைப்பதற்கான மண்டபத்தை உருவாக்கவும்

3. முதியோருக்கான வாசிகசாலை அமைக்கவும்

4. எமது சிறார்களுக்குக் தமிழ்க் கல்வி புகட்டும் நால்வர் தமிழ்க் கலை நிலையத்தை விரிவுபடுத்தவும்

எண்ணியுள்ளோம்.

ஆதலால் எமது இம் முயற்சிக்கு இருகரம் நீட்டி ஆதரவு தருமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

உங்களது சிறிய அளவிலான உதவி சமூகத்துக்குப் பெரிய அளவில் உதவப் போகிறது.

உதவி செய்ய விரும்புபவர்கள் மேலுள்ள முகவரியுடனோ அல்லது தொலைபேசி எண்ணுடனோ தொடர்பு கொள்ளுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

இணை ஆசிரியர்கள்

# MICRO & PERIPHERAL SERVICES LTD

**Would like to announce their new range of QED computers and special offers on Star dot matrix and laser printers**




Look out for our **QED range of 286, 386SX, 386DX, and 486DX** computers

*Save on desk space with our Micro QED range,*
*the computer with a micro footprint*

**If you want an even bigger bargain why not assemble your very own PC. Call us for technical advice and for our very special prices. This way you can have a PC customised exactly to your requirements. A large variety of components are available: colour or black and white monitors, video cards, processors, memory, etc.**

We also carry the complete line of STAR dot matrix and laser printers. These offer exceptional value for money - the ideal partner for your computer


**MPS Ltd. have an excellent repair shop. Discover our expertise. Try our very reasonably priced maintenance plan. Emergency call-outs are done on a time and materials only basis. We have an extensive range of services, in fact MPS spells**

## "Business computing at budget prices"

Take this opportunity and call MPS now.

**Telephone Milton Keynes (0908) 261400 (4 lines)**

*Micro & Peripheral Services Ltd for complete computer sales, service and technical support*



# JINI PHOTO

**1 Hour Quality Film Processing and Printing, Passport Pictures, Studio Portraits, Creative Wedding Photography, specialised in Asian Wedding Albums**

**795 Romford Road Manor Park,London E12 5AN**

**Tel : 081 - 514 8858**

ஐரோப்பாவில் தரமான தமிழ்,ஆங்கில
அச்சுவேலைகளுக்கு செல்வம் அச்சகம்
SELVAM PRINTERS Tel : 081 - 478 6766

சைவ முன்னேற்றச் சங்கத்தினரால்
வடிவமைக்கப்பட்டு,அச்சமைக்கப்பட்டு 14-4-93 அன்று
வெளியிடப்பட்டது.